www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# பள்ளிக் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024-2025

### மானியக் கோரிக்கை எண் 43


## அன்பில் மகேஸ் பொய்யாமொழி
பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2024


www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# பள்ளிக் கல்வித் துறை
## கொள்கை விளக்கக் குறிப்பு 2024–25

### பொருளடக்கம்



| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | தொடக்கக் கல்வி, உயர்நிலை, மேல்நிலைக் கல்வி மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி | 6 |
| 3 | தனியார் பள்ளிகள் | 38 |
| 4 | மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் | 49 |
| 5 | அரசுத் தேர்வுகள் இயக்ககம் | 80 |
| 6 | பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி | 101 |
| 7 | பொது நூலகங்கள் | 108 |
| 8 | ஆசிரியர் தேர்வு வாரியம் | 137 |
| 9 | தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் | 146 |
| 10 | நிதி ஒதுக்கீடு | 164 |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# 1. முன்னுரை

"கல்வி மட்டுமே சமத்துவம் மலரச் செய்யும்
மிகப் பெரிய ஆயுதம்"

– முத்தமிழ் அறிஞர் கலைஞர்

குழந்தைகளிடமிருந்து சிறந்த பண்பு நலன்களை வெளிக்கொணர்வதும் அவர்களை எதிர்கால சமூகத்திற்குப் பயனுள்ள சிறந்த மனித வளமாக மாற்றுவதே கல்வியின் அடிப்படை நோக்கமாகும். இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளி வயதுக் குழந்தைகளும் தங்களுக்கு உரிமையுடைய தரமான கல்வியைப் பெறுவதற்கும் ஒருங்கிணைந்த ஒட்டுமொத்த ஆளுமை வளர்ச்சி அடைவதற்கும் தேவையான திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இதற்கென, தமிழ்நாடு அரசால் 2024–25ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கல்வித் துறைக்கு மானியமாக ரூ.44,042.08 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில கலைத்திட்ட வடிவமைப்பின் கற்றல் நோக்கங்களை அடைய செயல்வழிக் கற்றல் அடிப்படையிலான வகுப்பறைச் செயல்பாடுகளின்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

மூலம் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் கற்றல் அடைவுகளை உறுதி செய்தல், பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான ஆளுமை மேம்பாட்டுப் பயிற்சிகள், ஆசிரியர்களின் திறன் மேம்பாட்டிற்கான சீரிய பயிற்சி வழங்குதல், அரசுப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், குறிப்பாக வளர்ந்துவரும் தொழில்நுட்ப வளர்ச்சியினை கற்றல் கற்பித்தலுக்குப் பயன்படுத்தும் நோக்கில் அரசுப் பள்ளிகளில் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள், அதிகவேக இணைய வசதிகளுடன் கூடிய திறன்மிகு வகுப்பறைகள் உருவாக்குதல் போன்றவற்றின் மூலம் மாணவர் நலன் மற்றும் நிர்வாக நலனை மேம்படுத்தும் முன்னோடித் திட்டங்கள் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அனைவருக்கும் கல்வி உரிமை கிடைக்கும் வகையில் அனைத்து பள்ளி வயதுக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பதை உறுதி செய்வதுடன் கல்விசார் செயல்பாடுகளுடன் கல்வி இணைச் செயல்பாடுகளுக்கும் உரிய முக்கியத்துவம் அளித்தல், உடல்நலக் கல்வி, விளையாட்டு, பள்ளி



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

மன்றச் செயல்பாடுகள், அறிவியல் கண்காட்சிகள், கலைத் திருவிழாக்கள் ஆகியவற்றின் மூலம் மாணவர்களின் ஒட்டுமொத்த ஆளுமை வளர்ச்சி உறுதிப்படுத்தப்படுகிறது.

பொதுக்கல்வியோடு மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் வழங்கப்படுவதுடன் அவர்களின் ஆர்வம் மற்றும் விருப்பத்திற்கேற்ற துறைகளைத் தெரிவு செய்வதற்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் உயர்கல்வி நிறுவனங்களில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் நலன் சார்ந்து மேற்கொள்ளப்படும் அனைத்து முன்னெடுப்புகளும் தொடக்கக் கல்வி இயக்ககம், பள்ளிக் கல்வி இயக்ககம், தனியார் பள்ளிகள் இயக்ககம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி ஆகியவற்றின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. கல்லாதோர் இல்லாத தமிழ்நாட்டினை உருவாக்கிடும் நோக்கில் பள்ளி சாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம் செயல்பட்டு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

வருகிறது. மாணவர்கள் கல்விசார் செயல்பாடுகளுக்குத் திட்டமிடுதல், ஆசிரியர் திறன் மேம்பாடு, நவீன சூழலுக்கேற்ற கல்வி நுட்பங்களைச் செயல்படுத்துதல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. மாணவர்களின் கற்றல் அடைவினை மதிப்பீடு செய்யும் பொதுத் தேர்வுகளோடு கல்வி ஊக்கத்தொகை வழங்குவதற்கான போட்டித் தேர்வுகளையும் அரசுத் தேர்வுகள் இயக்ககம் செம்மையாக நடத்திவருகிறது. மாணவர் சார்ந்த நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல், பாடநூல்கள் அச்சிடுதல், அறிவுசார் தேடலுக்கு நூல்கள் உருவாக்கம் உள்ளிட்ட பணிகள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் ஆசிரியர் தேர்வு வாரியம் பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வி பயிற்றுவிக்கத் தேவைப்படும் ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் பணியினை செவ்வனே மேற்கொண்டு வருகிறது. கல்வியில் சிறந்த தமிழ்நாட்டு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

மாணவர்களின் அறிவாற்றல் மேம்படவும், சிந்தனை செழுமையுறவும் பொது நூலக இயக்ககம் முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# 2. தொடக்கக் கல்வி, உயர்நிலை, மேல்நிலைக் கல்வி மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

## 2.1. அறிமுகம்

பள்ளியில் சேர்க்கப்படும் குழந்தைகள் வகுப்பறைச் சூழலில் கற்கத் துவங்கும் முன்னரே தங்களது வாழ்வியல் சூழலிலிருந்து கற்றல் அனுபவத்தினைப் பெறத் தொடங்குகின்றனர். அத்தகைய மாணவர்களின் அறிவுத் தேடலுக்கு ஏற்றதொரு குழந்தை மைய வகுப்பறைச் சூழலைப் பள்ளியில் உருவாக்குவதுடன், அறிவியல் மனப்பான்மையுடன் பிரச்சினைகளை அணுகும் வகையிலான கல்வி முறையின் மூலம் குழந்தைகளின் தனி மனித மேம்பாடு மற்றும் சமூகப் பொறுப்புணர்வுள்ள மனித வளத்தினை உருவாக்கும் பள்ளிக் கல்வியினை அனைத்துக் குழந்தைகளும் பெறுவதற்குத் தேவையான பள்ளி உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், நவீன தொழில்நுட்பங்களை வகுப்பறைக் கற்றல், கற்பித்தலுக்குப் பயன்படுத்துதல், அனைவருக்கும் சமமான கற்றல் வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் மாணவர்களின்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

ஒருங்கிணைந்த வளர்ச்சியினை உறுதி செய்தலே தமிழ்நாடு அரசின் தொலைநோக்குப் பார்வையாகும்.

## 2.2. நோக்கங்கள்

- அனைத்து பள்ளி வயதுக் குழந்தைகளையும் வயதுக்கேற்ற வகுப்பில் சேர்த்தல் மற்றும் தக்க வைத்தல்.
- சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகள் உள்ளிட்ட அனைவருக்குமான உள்ளடக்கிய கல்விச் சூழலை உருவாக்குதல்.
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.
- கல்வி சாரா மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளின் மூலம் மாணவர்களின் தனித்திறமைகளை மேம்படுத்தவும், காட்சிப்படுத்தவும் போதுமான வாய்ப்புகளை உருவாக்குதல்.
- போதுமான அடிப்படை பள்ளி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

- தேவைப்படும் நேர்வில் புதிய பள்ளிகளைத் தொடங்குதல் மற்றும் பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்.
- பாலின வேறுபாடு களைதல் மற்றும் அனைவருக்கும் சமமான கற்றல் வாய்ப்புகளை உருவாக்குதல்.
- கல்வியின் மூலம் நல்விழுமியங்களைப் பெறுதல், நிலையான நீடித்த வளர்ச்சி மற்றும் பன்முக ஆளுமைத் தன்மை பெறும் வகையிலான கல்வி வழங்குதல்.

## 2.3. பள்ளி வசதிகள்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் கல்வி பெறும் வகையில், குடியிருப்புகளுக்கு அருகாமையில் பள்ளிகள் உருவாக்கும் நோக்கில் புவியியல் தகவல் முறைமையினைப் பயன்படுத்தி புதிய பள்ளிகள் உருவாக்கம் மற்றும் பள்ளிகள் தரம் உயர்த்தப்படுவதற்கான தேவை கண்டறியப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2023–24ஆம் கல்வியாண்டில் 4



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 6 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், மலைப்பாங்கான பகுதிகளில் வசித்துவரும் மாணவர்கள் உள்ளிட்ட தேவைப்படும் அனைத்து மாணவர்களுக்கும் போக்குவரத்து வசதி மற்றும் பாதுகாவலர் வசதி வழங்கப்பட்டு வருகிறது. 2023-24 ஆம் கல்வியாண்டில் 27,707 மாணவர்களுக்கு ரூ.16.62 கோடி போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதிக்கென செலவிடப்பட்டுள்ளது. மேலும், பெண் குழந்தைகள் மற்றும் உண்டு உறைவிட வசதி தேவைப்படும் குழந்தைகளின் கல்வியினை உறுதிசெய்யும் நோக்கில் 61 கஸ்தூரிபா காந்தி பள்ளிகளும், 44 மாணவியர் விடுதிகளும், 15 நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் உண்டு உறைவிடப் பள்ளிகள் மற்றும் 5 விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளுக்கென 2023-24ஆம் கல்வியாண்டில் ரூ.68 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதன்மூலம் நீடித்த வளர்ச்சி இலக்கான, அனைவருக்கும் கல்வி கிடைப்பதை உறுதிப்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

*2.3.1. மாதிரிப் பள்ளிகள்*

தமிழ்நாட்டுப் பள்ளிக் கல்வியில் முற்போக்கான கல்விக்கான அளவுகோல்களை அமைக்கும் வகையில் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை மாணவர்கள் பயிலும் வகையில் 38 மாவட்டங்களிலும் தலா ஒன்று வீதம் அரசு மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அரசுப் பள்ளிகளில் பயின்றுவரும் தனித்திறன் மிக்க மாணவர்களிலிருந்து அவர்களது ஒட்டுமொத்த செயல்திறன்கள் அடிப்படையில் அனைத்துப் பிரிவினருக்கும் இப்பள்ளியில் பயில உரிய வாய்ப்பினை அளிக்கும் வகையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அவர்களது விருப்பம் மற்றும் திறமைக்கேற்ப உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற ஏதுவாக சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன், அவர்களது ஒட்டுமொத்த ஆளுமை வளர்ச்சியினை உறுதிப்படுத்தும் வகையில் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2022-23 ஆம் கல்வியாண்டில் இப்பள்ளிகளில் பயின்ற மாணவர்களில் 274 மாணவர்கள் இந்திய



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

அளவில் மிகச் சிறந்து விளங்கும் உயர்கல்வி நிறுவனங்களிலும், அயல்நாட்டு நிறுவனங்களிலும் சேர்க்கை பெற்றுள்ளனர். 2024-25ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் இப்பணிகளுக்கென ரூ.250 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

*2.3.2. தகைசால் பள்ளிகள்*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, அரசுப் பள்ளி மாணவர்களின் கற்றல் சூழலை மேம்படுத்தி, அவர்கள் கற்றலில் சிறந்து விளங்குவதை ஊக்குவிக்கும் வகையில் 2022-23 ஆம் கல்வியாண்டில் 28 அரசுப் பள்ளிகள் தகைசால் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. பள்ளி உட்கட்டமைப்பினை மேம்படுத்துதல், நவீன தொழில்நுட்பங்களின் அடிப்படையிலான வகுப்பறைச் சூழலை உருவாக்குதல், கல்வி இணைச் செயல்பாடுகள் மற்றும் மாணவர்களின் தனித்திறன் மேம்பாட்டிற்குத் தேவையான கட்டமைப்பினை நிறுவுதல் உள்ளிட்ட பணிகளுக்காக 2023-24ஆம் கல்வியாண்டில் ரூ.25 கோடி ஒதுக்கீடு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

செய்யப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### *2.3.3. உள்ளடக்கிய கல்வி*

மாற்றுத்திறனுடைய மாணவர்கள் தடையின்றிக் கல்வி பெறுவதனை உறுதிப்படுத்தவும் கற்றல் குறைபாடு உள்ள மாணவர்களை, சிறப்புப் பயிற்றுநர்கள் ஆரம்ப காலக் கண்டறிதலின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு அடையாளம் காணவும் 'நலம் நாடி' எனும் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டார அளவிலும் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு அவரவர்களின் தனிநபர் தேவையினைப் பொறுத்து பள்ளி அல்லது பள்ளி ஆயத்தப் பயிற்சி மையம் அல்லது அவர்களின் இல்லத்திலேயே சிறப்புப் பயிற்றுநர்கள் மற்றும் இயன்முறை மருத்துவர்களின் மூலமாக சிறப்புக் கல்வி மற்றும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகள், தொடர்ச்சியாக பள்ளிக்கு அல்லது மையத்திற்கு இடைநிற்றலின்றி வந்து பயன்பெறுவதை உறுதி



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

செய்யும் நோக்கில் அவர்களுக்கான போக்குவரத்துப்படி, பாதுகாவலர்படி மற்றும் பெண் குழந்தைகளுக்கு ஊக்கத் தொகை ஆகியவை வழங்கப்பட்டுவருகின்றன. 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அறிவுசார் குறைபாடுள்ள மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களின் அடிப்படை எண்ணறிவு மற்றும் எழுத்தறிவுத் திறன்களை உறுதி செய்யும் வகையில் எளிமைப்படுத்தப்பட்ட எண்ணும் எழுத்தும் பயிற்சி நூல்கள் மற்றும் ஆசிரியர் கையேடு போன்ற கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. வரும் 2024-25ஆம் கல்வியாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் இச்செயல்பாடுகளை மேற்கொள்ள ரூ.91.25 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2.4. பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாடு

அரசுப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டது. அதன்படி 2022-23 மற்றும் 2023-24ஆம் ஆண்டுகளில் ஊராட்சி ஒன்றிய



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட ரூ.1,887.75 கோடியும், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக ரூ.316 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. அதனைத் தொடர்ந்து 2024-25 ஆம் கல்வியாண்டிலும் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுத்தப்படும் என 2024-25ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிட்டுள்ளதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2024-25 ஆம் கல்வியாண்டு வரவு செலவு திட்டத்தில் அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ.150 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கீழ் அரசுப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ரூ.168.88 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

### *2.4.1. பள்ளி மானியம்*

பள்ளிக் கழிவறைகளைத் தூய்மையாகப் பராமரித்தல், இணைய வசதி ஏற்படுத்துதல், கற்றல் மற்றும் கற்பித்தலுக்கான உபகரணங்கள் கொள்முதல் செய்தல், பள்ளியின் தளவாடப் பொருட்களைப் பராமரித்தல், கட்டடங்களில் சிறு பழுதுகளைச் சரி செய்தல் போன்றவற்றின் மூலம் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் கற்றல் சூழலை மேம்படுத்துவதற்கு ஆண்டுதோறும் பள்ளி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பள்ளி ஒன்றிற்கு ரூ.12,500 முதல் ரூபாய் ஒரு இலட்சம் வரை அனுமதிக்கப்படுகிறது. 2024–25ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ.123.06 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### *2.4.2. பள்ளிப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு வசதி மேலாண்மை*

அரசுப் பள்ளிகளில் பள்ளிச் சுகாதாரம், கழிவறை மேலாண்மை மற்றும் பாதுகாவலர் வசதி ஆகியவற்றை உருவாக்கும் பொருட்டு தேவையான



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

பணியாளர்கள் வெளிமுகமை மூலம் ஈடுபடுத்தப்பட உள்ளனர். 2024–25 ஆம் கல்வியாண்டில், இத்திட்டம் முதற்கட்டமாக 1,954 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.140.26 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் படிப்படியாக இதர பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

### *2.4.3. உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள்*

தற்போதைய தொழில்நுட்ப உலகில் எதிர்காலத்திற்கு ஏற்ற வகையில் மாணவர்களைத் தயார்படுத்தும் பொருட்டு தொழில்நுட்ப உள்கட்டமைப்பை மேம்படுத்துவது மிக முக்கியமானது என்பதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசின் எண்ணிய தொழில்நுட்ப (Digital Technology) விரிவாக்கம் செய்யும் நிகழ்வின் ஒரு முன்னெடுப்பாக 8,209 உயர்தொழில்நுட்ப ஆய்வங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. மேலும், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தற்போது பயன்பாட்டில் உள்ள உயர்தொழில்நுட்ப ஆய்வங்களை நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில், மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதல் எண்ணிக்கையிலான கணினிகளுடன்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

மேம்படுத்தவும், அதேபோன்று ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளிலும் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களை அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

### *2.4.4. திறன்மிகு வகுப்பறைகள்*

கற்றல் கற்பித்தலுக்கு அடிப்படைக் கருவிகளாக கரும்பலகைகளும், பாடப்புத்தகங்களும் பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில், பாடப்பொருள்சார் அறிவினை காணொலிக் காட்சிகள் வாயிலாகவும், நவீன தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான கற்பித்தல் உத்திகளை ஆசிரியர்கள் பயன்படுத்திடவும், மாணவர்கள் சுயமாகக் கற்கவும், நிலைத்த கற்றல் அனுபவத்தினைப் பெறுவதற்கும் ஏதுவாக அரசு தொடக்க, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 22,931 திறன்மிகு வகுப்பறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. 2024–25ஆம் கல்வியாண்டில் மேலும் பள்ளிகளுக்குப் புதிதாக திறன்மிகு வகுப்பறைகள் அமைக்கப்பட உள்ளன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## 2.5. மாணவர்களுக்கான நலத்திட்டங்கள்

அரசுப் பள்ளிகளில் கல்வி பயின்றுவரும் மாணவர்கள் சமூக பொருளாதார காரணங்களால் தடையேதுமின்றி பள்ளிக் கல்வியினை நிறைவு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அரசு பின்வரும் மாணவர் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

2023-24 ஆம் ஆண்டு

| வ. எண். | நலத் திட்டத்தின் பெயர் | வகுப்பு | பயன்பெற்ற மாணாக்கர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | பாடநூல்கள் | 1-12 | 76.29 |
| 2. | நோட்டுப் புத்தகம் | 1-10 | 59.68 |
| 3. | புத்தகப்பை | 1-12 | 70.69 |
| 4. | காலணிகள், கால் ஏந்திகள் மற்றும் காலுறைகள் | 1-10 | 59.88 |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

| | | | |
|---|---|---|---|
| 5. | புவியியல் வரைபடம் | 6 மற்றும் 7 முதல் 10 ஆம் வகுப்பு வரை புதியதாக சேரும் மாணவர்கள் | 8.73 |
| 6. | கிரையான் மற்றும் வண்ணப் பென்சில் | 1–5 | 25.23 |
| 7. | கணித உபகரணப்பெட்டி | 6 & 9 (7, 8 புதியதாக சேரும் மாணவர்கள்) | 13.43 |
| 8. | சிறப்பு ஊக்கத் தொகை | 10–12 | 15.08 |
| 9. | சீருடை | 1–8 | 41.16 |
| 10. | மிதிவண்டி | 11 | 5.47 |
| 11. | கம்பளிச்சட்டை | 1–8 (மலைப்பகுதி பள்ளிகளில் உள்ள சத்துணவு உண்ணும் மாணவர்களுக்கு) | 1.17 |
| 12. | உறைகாலணிகள், மழையாடைகள், காலுறைகள் | 1–8 (மலைப்பகுதி பள்ளிகளில் உள்ள சத்துணவு உண்ணும் மாணவர்களுக்கு) | 1.17 |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

| | | | |
|---|---|---|---|
| 13. | புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 1–10 | 48.46 |
| 14. | முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் (சமூக நலத் துறை) | 1–5 | 18.53 |
| 15. | பேருந்துப் பயண அட்டை (போக்குவரத்து துறை) | 1–12 | 12.74 |
| 16. | வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான திட்டம் | 1–12 | 2285 (மாணவர்கள்) |
| 17. | மாணவர்களுக்கு விபத்தினால் ஏற்படும் பாதிப்புகளுக்கான நிதியுதவி | 1–12 | 26 (மாணவர்கள்) |

## 2.6. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

மாணவர்களின் வருகையை ஊக்குவிக்கவும், அவர்களின் உடல்நலத்தைக் கருத்தில் கொண்டும் ஊட்டச்சத்துமிக்க காலை உணவு உண்பதை



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

உறுதிப்படுத்தும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு வழங்கும் முன்னோடித் திட்டம் அரசுத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்குச் சமூக நலத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2024–25ஆம் கல்வியாண்டில் ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்படுகிறது.

## 2.7. விளையாட்டு மற்றும் கலைத்திறன் போட்டிகள்

### *2.7.1. மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள்*

பள்ளி மாணவர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் வகையிலும் எதிர்காலத்தில் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் நோக்கிலும் மாநில அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக பள்ளி மாணவர்களுக்கான மண்டல, மாவட்ட, மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகளில்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

சிறப்பான பங்களிப்பை அளிக்கும் மாணவர்கள் இந்திய பள்ளிக் கூட்டமைப்பால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறுகின்றனர். 2023-24 இந்திய பள்ளிக் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டிலிருந்து 2,676 மாணவர்கள் பங்கேற்றனர். தேசிய அளவில் 95 தங்கம், 112 வெள்ளி மற்றும் 202 வெண்கல பதக்கங்களை தமிழ்நாட்டு மாணவர்கள் வென்றுள்ளனர். தேசிய அளவில் தமிழ்நாட்டு மாணவர்களின் இச்சாதனை குறிப்பிடத்தக்கது. பள்ளி விளையாட்டுப் போட்டிகளுக்கென 2024-25ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.12.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### *2.7.2. சதுரங்க விளையாட்டு*

இந்திய அளவில் சதுரங்க விளையாட்டினை மாணவர்களிடையே ஊக்கப்படுத்தி வளர்ப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. மாணவர்களின் சதுரங்க விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்களின் பகுப்பாய்வுச் சிந்தனை மற்றும் சிக்கலைத் தீர்க்கும் திறனை மேம்படுத்தும் வகையிலும் அரசுப் பள்ளிகளில்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 7 முதல் 17 வயது வரையுள்ள பல்வேறு பிரிவினருக்கு இச்சதுரங்கப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. 2023–24ஆம் கல்வியாண்டில் ரூ. 65 இலட்சம் செலவில் மாணவ / மாணவியர்களுக்கான சதுரங்கப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

### *2.7.3. கலைத்திருவிழா*

"சங்கமிப்போம், சமத்துவம் படைப்போம்" என்ற கருப்பொருளுடன் தமிழர்களின் பாரம்பரியம், கலாச்சாரத்தோடு தொடர்புடைய கவின்கலைகளில் மாணவர்களின் திறமையை வெளிப்படுத்தவும், ஊக்குவிக்கவும் 190 தலைப்புகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான கலைத் திருவிழாப் போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் பள்ளி அளவில் 40.25 இலட்சம் மாணவர்கள் பங்கேற்றனர். பள்ளி அளவில் சிறப்பிடம் பெற்ற 6.85 இலட்சம் மாணவர்கள் ஒன்றிய அளவிலும், ஒன்றிய அளவில் சிறப்பிடம் பெற்ற 1.96 இலட்சம் மாணவர்கள் மாவட்ட அளவிலும், மாவட்ட அளவில் சிறப்பிடம் பெற்ற 15,931 மாணவர்கள் மாநில அளவிலும் நடைபெற்ற



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

கலைத் திருவிழாப் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

*2.7.4. கலையரங்கம்*

மாணவர்களிடம் உள்ளார்ந்திருக்கும் கலைத் திறமைகளை வெளிக்கொணரும் நோக்கில் அரசுப் பள்ளிகளில் 6 முதல் 9 வகுப்பு வரையிலான மாணவர்களுக்குப் பல்வேறு கலை வடிவங்களைக் கற்பிக்கவும், பயிற்சி அளிக்கவும் சிறப்புப் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின்கீழ் 865 உள்ளூர் கலைஞர்கள் மற்றும் 8,049 அரசுப் பள்ளி ஆசிரியர்களைக் கொண்டு மாணவர்களுக்கு கவின்கலைகள், நாடகம், இசை, நடனம் மற்றும் நாட்டுப்புறக் கலைகள் போன்றவற்றில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கென 2024-25 ஆம் ஆண்டில் ரூ.5.30 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

*2.7.5. சிறார் திரைப்பட விழா*

பல்வேறுபட்ட கலாச்சாரம், மொழி, பண்பாடு ஆகியவற்றை மாணவர்கள் அறிந்துணரவும் உற்று நோக்கல், ஆய்ந்தறிதல், பரந்த மனப்பான்மையுடன்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

கூடிய தனித்திறன் மேம்பாட்டினை அடையும் நோக்கிலும் 6 முதல் 9ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் சிறார் திரைப்படங்கள் திரையிடப்பட்டு வருகின்றன. மேலும், கதை விமர்சனம், திறனாய்வு, தனிநபர் நடிப்பு, குறும்படம் தயாரித்தல், துறைசார் வல்லுநர்களுடன் உரையாடல் ஆகிய நிகழ்வுகள் மூலம் மாணவர்களின் கலைத் திறன் மேம்பாட்டிற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### *2.7.6. வானவில் மன்றம் – நடமாடும் அறிவியல் ஆய்வகம்*

தமிழ்நாடு முழுவதும் உள்ள 13,210 அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 வகுப்பு வரை பயிலும் 13.61 இலட்சம் அரசுப் பள்ளி மாணவர்கள், அறிவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களைச் சுயமாக அறிந்துணரும் வகையில் ஆய்வு செய்து கற்றலை மேம்படுத்துவதற்காக வானவில் மன்றமானது (நடமாடும் அறிவியல் ஆய்வகம்) ரூ.19 கோடி செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக 710



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

வானவில் மன்றக் கருத்தாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு உரிய பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இக்கருத்தாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவியல் மற்றும் கணித உபகரணக் கருவிகளுடன் உரிய பள்ளி ஒதுக்கீட்டின்படி நேரடியாகச் சென்று மாணவர்களுக்கு அறிவியல் மற்றும் கணிதச் சோதனைகளைச் செய்து காட்டுதல் மூலம் பயிற்சி அளிக்கின்றனர். இதன்மூலம் பெறப்படும் அனுபவங்கள் மாணவர்களிடம் அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பதற்கும் நடைமுறை வாழ்வியல் பிரச்சினைகளுக்கு அறிவியல் ரீதியாகத் தீர்வு காணும் ஆற்றலை உருவாக்கவும் பயனுள்ளதாக அமைகின்றன.

### *2.7.7. மாணவர் மன்றச் செயல்பாடுகள்*

ஒவ்வொரு பள்ளியிலும் இலக்கியம், கலை, நாடகம், அறிவியல், கணிதம், பொது அறிவு, சுகாதாரம், நுகர்வோர் விழிப்புணர்வு, வாக்காளர் விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் மாணவர்கள் தங்கள் திறனை வெளிப்படுத்தவும், மேம்படுத்தவும் மாணவர் மன்றச் செயல்பாடுகள்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

அடிப்படையாக அமைகின்றன. மன்றச் செயல்பாடுகளில் பங்கேற்கும் மாணவர்களின் தன்னம்பிக்கை மேம்படுவதுடன் சமூகப் பொறுப்புணர்வு மற்றும் விழிப்புணர்வு பெறுகின்றனர். மாணவர் மன்றச் செயல்பாடுகளின் அடிப்படையில் பள்ளி, வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு சிறப்பிடம் பெறும் மாணவர்கள் கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

### *2.7.8. கோடைக்கொண்டாட்டம் மற்றும் கல்விச் சுற்றுலா*

மாணவர்களின் தனித் திறனை மேம்படுத்தவும், கோடை விடுமுறையினைப் பயனுள்ள வகையில் சமூகக் கற்றலுடன் செலவிடவும், கோடைக் கொண்டாட்டம் எனும் சிறப்பு பயிற்சி முகாம் தமிழகத்தில் உள்ள மலைப் பகுதிகளில் நடத்தப்பட்டு வருகிறது. இந்நிகழ்வில் சூழலியல், தலைமைத்துவம், மனித உரிமை, சமூக நீதி, பெண்ணுரிமை ஆகியவற்றின் அடிப்படையிலான பயிலரங்குகள் நடத்தப்படுகின்றன. 2023–24ஆம் கல்வியாண்டில் 1,100 மாணவர்கள் கோடைக் கொண்டாட்ட நிகழ்வில்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

பங்கேற்றனர். இத்திட்டத்திற்கு ரூ.50 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

கலைத் திருவிழா, இலக்கிய மன்றம், வினாடி வினா மன்றம், வானவில் மன்றம், சிறார் திரைப்படச் செயல்பாடுகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பிடம் பெறும் மாணவர்கள் வெளிநாடுகளுக்குக் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர். அதன்படி 2023–24 ஆம் கல்வியாண்டில் மேற்கண்ட மன்றப் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவ / மாணவியர்களை சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய வெளிநாடுகளுக்குச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர். 2024–25ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் இதற்கென ரூ.5.20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2.8. மாபெரும் வாசிப்பு இயக்கம்

அரசுப் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை வளர்க்க, 16 பக்கங்கள் கொண்ட புத்தகங்கள் வடிவமைக்கப்பட்டு குழந்தைகள் அணுகக்கூடிய மொழிநடையில் எழுதப்பட்டுள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

இந்தப் புத்தகங்கள் நுழை, நட, ஓடு, பற என நான்கு தனித்தனி வாசிப்பு நிலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக 2023-24ஆம் ஆண்டு ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு முதற்கட்டமாக 53 புத்தகங்கள் 90,45,018 பிரதிகள் அச்சடிக்கப்பட்டு அனைத்து அரசுப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் 70 புத்தகங்கள் மற்றும் 1 வாசிப்பு இயக்க கையேடு என 1,31,68,048 பிரதிகள் அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட உள்ளது. நடப்புக் கல்வியாண்டில் 127 புத்தகங்கள் வடிவமைக்கப் பணிமனை நடத்தி, புத்தகங்களை அச்சிட்டு 37,592 அரசுப் பள்ளிகளுக்கும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.9. தமிழ் மொழி கற்போம்

பிற மாநிலங்களிலிருந்து புலம்பெயர்ந்து வரும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கும் பொருட்டு, தங்களின் தாய்மொழியுடன் தங்கு தடையின்றித் தமிழில் பேசவும், எழுதவும் "தமிழ்மொழி கற்போம்" என்ற திட்டம் 2023-24 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டது. இக்குழந்தைகள்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

தமிழக அரசுப்பள்ளிகளில் சேர்ந்து தமிழ் மொழியை ஒரு பாடமாகவும், பிறபாடங்கள் அனைத்தும் தங்கள் தாய் மொழியிலும் கற்பதற்கு ஏதுவாக சிறப்புப் பயிற்சி மையங்கள் தொடங்கப்பட்டு தலைமையாசிரியர்களின் மேற்பார்வையின்கீழ் பள்ளி வளாகத்திற்குள் அல்லது அருகில் செயல்பட்டு வருகின்றன. 15 மாவட்டங்களில் 57 சிறப்பு மையங்களில் 64 கல்வித் தன்னார்வலர்கள் மூலம் 1261 புலம்பெயர்ந்த குழந்தைகள் பயின்று வருகின்றனர்.

## 2.10. சேவைகள்

### *2.10.1. நாட்டு நலப்பணித் திட்டம்*

வளரிளம் பருவ மேல்நிலைக் கல்வி மாணவர்களுக்குச் சமூகப் பொறுப்புணர்வு செயல்பாடுகள் மூலம் நன்னெறிகளை மேம்படுத்தும் நோக்கில் நாட்டு நலப்பணித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பள்ளி மாணவர்கள் சுகாதார முகாம், இரத்ததான முகாம், சூழலியல் செயல்பாடுகள், விழிப்புணர்வு நடவடிக்கைகள் உள்ளிட்ட செயல்பாடுகளில் தன்னார்வத்துடன் செயல்பட்டு வருகின்றனர்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

தமிழ்நாட்டிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் 1,953 நாட்டு நலப்பணித்திட்ட அலகுகள் செயல்பட்டு வருகின்றன. 97,650 மாணவர்கள் இத்திட்டத்தில் சமூகப் பணியாற்றி வருகின்றனர்.

### *2.10.2. சாரண, சாரணியர் இயக்கம்*

பள்ளி மாணவர்களிடம் உடல் நலம், மனவளம், மனவெழுச்சியினை மேம்படுத்தும் சமூகப் பொறுப்புணர்வு ஆகியவற்றை உருவாக்குவதில் சாரண, சாரணியர் இயக்கம் முதன்மையான பங்காற்றி வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சாரண, சாரணியர் இயக்கம் செயல்பட்டு வருகிறது. சிறப்பாகச் செயல்படும் சாரண, சாரணியர்களுக்கு இராஜ்ய புரஷ்கார் விருது வழங்கப்படுகிறது. இதற்கெனத் தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள சாரண, சாரணியர் இயக்கத்தினை வலுப்படுத்தும் நோக்கில் சிறப்பு நிதியாக ரூ.2 கோடி நிலையான வைப்பாக முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதன் வட்டித் தொகை சாரண, சாரணியர் இயக்க நிர்வாக மற்றும் செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

இவ்வியக்கத்தில் 3,21,328 மாணவர்களும், 12,740 ஆசிரியர்களும் தங்களை இணைத்துக் கொண்டு அர்ப்பணிப்புணர்வுடன் செயல்பட்டு வருகின்றனர்.

*2.10.3. இளம் செஞ்சிலுவைச் சங்கம்*

இளம் செஞ்சிலுவைச் சங்க அலகுகள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பட்டு வருகின்றன. ஆசிரியர்கள் ஆலோசகராகவும், ஈடுபாடு உள்ள மாணவர்கள் தன்னார்வலர்களாகவும் இச்சங்கத்தில் செயல்படுகின்றனர். இச்சங்கம் மனித நேய மதிப்புகளைத் தூண்டவும், திறனை மெருகேற்றவும் உதவுகிறது. இம்மன்றத் தன்னார்வலர்களுக்கு, முதலுதவி, பேரிடர் மேலாண்மை, சாலைப் பாதுகாப்பு, தீயிலிருந்து தற்காத்துக் கொள்ளுதல் மற்றும் விழாக்களை வழி நடத்துதல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இச்சங்கம் 11,824 அலகுகளையும், 4,72,960 மாணவ உறுப்பினர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## 2.11. ஆசிரியர் நலன் சார்ந்த திட்டங்கள்

### *2.11.1. இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கைக்கணினி வழங்கும் திட்டம்*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனுக்காக அயராது பாடுபட்டுவரும் ஆசிரியர் சமூகத்தைச் சிறப்பிக்கும் வகையிலும் மாறிவரும் கற்றல் கற்பித்தல் முறைகளுக்கேற்ப ஆசிரியர்கள் தங்கள் தனித்திறனை மேலும் மேம்படுத்திக் கொள்வதற்கும் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு கைக்கணினி வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக 79,723 கைக்கணினிகள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு கைக்கணினிகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. வரும் கல்வியாண்டில் 2ஆம் கட்டமாக மேலும் 55,478 கைக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு ஆசிரியர்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

### *2.11.2. ஆசிரியர்களுக்கான முழு உடல் பரிசோதனைத் திட்டம்*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் ஆசிரியர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை முழு உடல் பரிசோதனை செய்வதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் முதற்கட்டமாக, 50 வயதிற்கு மேற்பட்ட 35,600 ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள். இதன் தொடர்ச்சியாக அடுத்தடுத்த ஆண்டுகளில் அனைத்து ஆசிரியர்களும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

### *2.11.3. கனவு ஆசிரியர் விருது*

ஆசிரியர்களின் கற்பித்தல் உத்திகள், பாடப்பொருள்சார் அறிவு, மாணவர் மேம்பாட்டிற்கான செயல்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் மூன்று கட்டத் தேர்வுகளின் மூலம் கனவு ஆசிரியர் விருதுக்குத் தகுதியான ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். தெரிவு செய்யப்பட்ட 380 ஆசிரியர்களுக்கு பள்ளிக் கல்வித் துறையின் சார்பில்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

விருதும் சான்றிதழும் வழங்கப்பட்டதுடன், இத்தேர்வுகளில் 90 சதவிகிதத்திற்கும் அதிகமான மதிப்பெண் பெற்ற 55 ஆசிரியர்கள் கல்வி, கலை, தொழில்நுட்பம், பாரம்பரியம், கலாச்சாரம் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் பின்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

### *2.11.4. கருணை அடிப்படையிலான நியமனம்*

தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின்கீழ் உள்ள அரசுப் பள்ளிகளில் / அலுவலகங்களில் பணிபுரிந்து பணிக்காலத்தில் மரணமடைந்த ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அவர்களது குடும்ப வறுமையினை உடனடியாகப் போக்க ஏதுவாக, தகுதி மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் 1972 ஆம் ஆண்டு முதல் கருணை அடிப்படையில் பணி வாய்ப்பு வழங்கப்படும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2021 முதல் 2023 வரை 586 நபர்களுக்குக் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி வாய்ப்பு வழங்கப்பட்டு உள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

### *2.11.5. அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது*

பள்ளிக் கல்வி, விளையாட்டு, மாணவர் மேம்பாடு, பள்ளிக் கட்டமைப்பு, பள்ளி மேலாண்மைக் குழுவின் செயல்பாடு, இல்லம் தேடிக் கல்வி உள்ளிட்ட அரசின் திட்டங்கள் அனைத்தையும் சிறப்பாகச் செயல்படுத்தும் 100 பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது வழங்கி பாராட்டுச் சான்றிதழும் கேடயமும் வழங்கும் திட்டம் 2022–23 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்விருது பெறும் தலைமையாசிரியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அவர்கள் பணியாற்றும் பள்ளி மேம்பாட்டிற்கு ரூ.10.00 இலட்சம் ஊக்க நிதி வழங்கப்பட்டு வருகிறது.

### *2.11.6. சிறந்த பள்ளிகளுக்கான பேராசிரியர் அன்பழகன் விருது*

கற்றல் கற்பித்தல், ஆசிரியர் திறன்மேம்பாடு, தலைமைத்துவம், மாணவர் வளர்ச்சி என பன்முக வளர்ச்சியினை வெளிப்படுத்தும் சிறந்த பள்ளிகளுக்கு பேராசிரியர் அன்பழகன் பெயரில் விருது



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

2023–24ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப் பட்டது. இவ்விருது பெற 16 தொடக்கப் பள்ளிகள், 22 நடுநிலைப் பள்ளிகள், 12 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 26 மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 76 பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டன. மேலும், இவ்விருது பெறும் 38 உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் உட்கட்டமைப்பினை மேம்படுத்த பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு நிதியாக ரூ.380 இலட்சம் வழங்கப் பட்டுள்ளன.

### 2.12. நிதி ஒதுக்கீடு

அரசால் இவ்வியக்ககங்களுக்கு 2024–25ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.42,559.70கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## 3. தனியார் பள்ளிகள் இயக்ககம்

### 3.1. முன்னுரை

தனியார் பள்ளிகளுக்கெனத் தனி இயக்ககம் உருவாக்கப்பட்டு 01.10.2022 முதல் செயல்பட்டு வருகிறது. அரசு வழிகாட்டுதலின்படி தனியார் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளின் கல்வி நலன் மற்றும் கல்வித்திறனை மேம்படுத்தும் வகையில் மாநிலப் பொதுக் கல்வி வாரியம் / மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் மற்றும் மாநிலப் பாடத்திட்டம் / மாநிலப் பாடத்திட்டம் இல்லாத கல்வி வாரியங்களைப் (State Common Board/CBSE/ICSE/ IB/IGCSE, etc) பின்பற்றிச் செயல்பட்டு வரும் 12,970 தனியார் பள்ளிகள் உள்ளன. இவற்றில் தமிழ்வழி மற்றும் ஆங்கில வழிகளில் கல்வி கற்கும் 63.42 இலட்சம் மாணவர்களின் கல்வி தேவையைப் பூர்த்தி செய்யும் இப்பள்ளிகள் மாநில அளவில் தனியார் பள்ளிகள் இயக்குநரகம் மூலமும் வருவாய் மாவட்ட அளவில் மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) மூலமும் கண்காணிக்கப்படுகின்றன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

### 3.2. தொலைநோக்கு

அனைத்து வகைத் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு பாதுகாப்பான உட்கட்டமைப்பு மற்றும் தரமான கல்வி, கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில் முழு கல்வித் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் நியமனம் முதலியவற்றைக் கண்காணித்தல், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் தனியார் பள்ளிகளுக்குத் தொடக்க அனுமதி, தரம் உயர்த்துதல் மற்றும் தொடர் அங்கீகாரம் ஆணைகள் (இணையதளம் வாயிலாக) வழங்கிக் கல்வி வளர்ச்சிக்கு உதவுதல், மாவட்ட மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கச் செய்வதன் மூலம் மாணவர்களின் உடல் திறனை மேம்படுத்துதல், அரசு நிதியுதவியின்றி செயல்படும் சுயநிதிப் பள்ளிகளில் தமிழ்வழியில் கல்வி பயிலும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் கல்வி உபகரணங்கள் வழங்குதல் மூலம் தமிழ்வழிக்கல்வியை ஊக்கப்படுத்தும் வகையில் செயல்படுதல், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை சட்டம், 2009 மற்றும்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

விதிகள் 2011ஐ நடைமுறைப்படுத்துதல், குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ஐ நடைமுறைப்படுத்துவதில் மாநில முகவாண்மையாக செயல்படுதல், தனியார் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையினை இணைய வழியில் வெளிப்படைத் தன்மையுடன் நடைமுறைப் படுத்தி அதன் அனைத்துத் தரவுகளையும் கல்வி மேலாண்மைத் தகவல் மையம் (EMIS) வாயிலாகக் கண்காணித்தல், ஆரோக்கியமான மாணவர் சமுதாயத்தை உருவாக்குதல் மற்றும் பெண் கல்வியை ஊக்குவித்தல் போன்றவற்றைத் தொலை நோக்காகக் கொண்டு தனியார் பள்ளிகள் இயக்ககம் செயல்பட்டு வருகிறது.

## 3.3. மண்டலம் வாரியாக அங்கீகாரம் ஆணை வழங்குதல்

தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் தனியார் பள்ளிகள் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை பள்ளியின் அங்கீகாரத்தினைப் புதுப்பித்து ஆணை பெற்றுச் செயல்பட்டு வருகின்றன. மாநிலப் பாடத் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வரும் தனியார் பள்ளிகள் பயன்பெறும் வகையில் மண்டல வாரியாக அங்கீகாரச்



www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

சான்றிதழ்கள் புதுப்பிக்கப்பட்டு சார்ந்த பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதன்படி திருச்சி, கோவை, சேலம், திருநெல்வேலி மற்றும் மதுரை மண்டலங்களைச் சேர்ந்த மொத்தம் 1935 தனியார் பள்ளிகளுக்கு அங்கீகார ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 3.4. தனியார் பள்ளிகளில் பணியாற்றும் தமிழ் ஆசிரியர்களுக்கான பயிற்சி

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் உள்ள 1 முதல் 10 வரையிலான வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவர்களும், தமிழை ஒரு பாடமாகக் கற்பதை உறுதி செய்வதற்காக அரசால் கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம் இயற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழ் கற்பதற்கான விதிகள், 2012, வகுக்கப்பட்டது. அதன்படி, மாநிலப் பாடத் திட்டத்தினைப் பின்பற்றும் பள்ளிகளில் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவர்களும் தமிழை ஒரு கட்டாயப் பாடமாகக் கற்கின்றனர். மேலும், மாநிலப் பாடத்திட்டம் அல்லாத பிற வாரியங்களால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளைப்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

பொறுத்தவரை (CBSE, ICSE, IGCSE, IB) தமிழ்மொழிப் பாடம், 2015–16ஆம் கல்வியாண்டில் 1 ஆம் வகுப்பில் தொடங்கிப் படிப்படியாக 2024–2025இல் 10ஆம் வகுப்பு வரையில் கற்பிக்கப்பட்டு வருகிறது.

பிறவாரியப் பள்ளிகளில் தமிழ்ப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பாடவல்லுநர்களைக் கொண்டு, சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சார்ந்த 900 தமிழ் ஆசிரியர்களுக்கு 20.09.2023 அன்று பயிற்சி தொடங்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களில் உள்ள 1,728 தனியார் பள்ளிகளில் பணியாற்றும் 4,951 தமிழ் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

3.5. வளர்இளம் பெண்களுக்கு மனநலம் மற்றும் உடல் நலம் சார்ந்த பயிற்சி

தனியார் பள்ளிகளில் 6 முதல் 10–ம் வகுப்புவரை பயிலும் வளர்இளம் பெண் குழந்தைகளுக்கு உடல்ரீதியாக மற்றும் மனரீதியாக ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க ஆலோசனை வழங்குதல், அவர்களின் உடல்நலம் மற்றும் மனநலம் சார்ந்து



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், அவர்களின் சந்தேகங்களுக்குத் தேவையான அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்குதல் போன்றவற்றிற்குச் சிறந்த மருத்துவர்களைக் கொண்டு விழிப்புணர்வு வழங்கும் பயிற்சியானது 19.11.2023 அன்று திருச்சி மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2023-24ஆம் கல்வியாண்டில் அனைத்து மாவட்டங்களில் உள்ள தனியார் பள்ளிகளிலும் 6ஆம் வகுப்பு முதல் 10 வகுப்பு வரை பயிலும் மாணவியர்களுக்கு மாவட்ட வாரியாகப் பயிற்சி மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 3.6. புதிய பள்ளிகளுக்கான அனுமதி/தொடர் அங்கீகார ஆணை வழங்குதல் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்துதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 31.12.2022 அன்று பள்ளிக் கல்வித் துறையில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ளன தனியார் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்துதல் இணைய முகப்பு (Regulatory Compliance Portal) மற்றும் அலுவலர்களுக்கான ஆய்வுச் செயலி (Inspection App)



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

தொடங்கி வைக்கப்பட்டது. இதன்மூலம் புதிய சுயநிதி மற்றும் தனியார் பள்ளிகள் துவக்க அனுமதி, தரம் உயர்த்துதல், தொடர் அங்கீகாரம் வழங்குதல், கூடுதல் பிரிவுகள் தொடங்குதல் போன்ற பல்வேறு சேவைகளையும் இணைய வழியாக மேற்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. மாவட்டக்கல்வி அலுவலர்கள் (தனியார் பள்ளிகள்) ஆய்வுச் செயலி வாயிலாக பள்ளிகளை ஆய்வு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. காகித முறையினை அகற்றி ஒளிவுமறைவற்ற முறையில் வெளிப்படையாகவும், விரைவாகவும், பள்ளிகளுக்குத் தேவையான ஆணைகள் இணைய வழியாகப் பள்ளிகளுக்கு நேரடியாக வழங்கப்பட்டு வருகின்றன.

**3.7. குழந்தைகளுக்கான இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009-ன் படி மாணவர்களுக்கான கல்விக் கட்டணம் திரும்ப வழங்குதல்**

2022-2023ஆம் கல்வியாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 7,669 சிறுபான்மையற்ற மெட்ரிகுலேசன் மற்றும் நர்சரி & பிரைமரி பள்ளிகளில் குழந்தைகளுக்கான இலவச மற்றும்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

கட்டாயக் கல்வி உரிமை சட்டம் 2009ன்படி 25% இட ஒதுக்கீட்டின்கீழ் எல்.கே.ஜி முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் 4,17,068 மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டணம் திரும்ப வழங்கும் பொருட்டு ரூ.383.59 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பள்ளிகளுக்கு ஈடு செய்யப்பட்டுள்ளது. 2023-24ஆம் கல்வியாண்டில் 25% இடஒதுக்கீட்டின்கீழ் எல்.கே.ஜி முதல் 8ஆம் வகுப்பு வரை 4,37,683 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

**3.8. அரசு உதவி பெறாத சுயநிதி தனியார் பள்ளிகளில் தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான விலையில்லா கல்வி உபகரணங்கள் வழங்குதல்**

தமிழ்வழிக் கல்வியை ஊக்குவிக்கும் வண்ணம் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இலவச பாடநூல் மற்றும் நோட்டுப்புத்தகம் போன்ற நலத்திட்ட உதவிகள் 2022-23ஆம் கல்வியாண்டு முதல் அரசு நிதியுதவியின்றிச் செயல்பட்டு வரும் சுயநிதிப் பள்ளிகளில் தமிழ் வழியில் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கும் வழங்கப்படும் என



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி 2023-24 ஆம் கல்வியாண்டில் அரசு நிதி உதவியின்றி செயல்பட்டுவரும் சுயநிதி தனியார் பள்ளிகளில் தமிழ்வழியில் கல்வி பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு விலையில்லா கணித உபகரணப் பெட்டி, புத்தகப்பை, புவியியல் வரைபடம், வண்ணப் பென்சில், கிரையான்ஸ், காலணிகள், கால் ஏந்திகள் மற்றும் காலுறைகள், கம்பளிச் சட்டை, மழையாடைகள், உறை காலணிகள் மற்றும் காலுறைகள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வாயிலாகவும், விலையில்லா நோட்டுப் புத்தகங்கள் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (TNPL) வாயிலாகவும் பெற்று வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 2023-24ஆம் கல்வியாண்டில் 55,186 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

**3.9. தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்கு முறைப்படுத்துதல்) சட்டம், 2018 மற்றும் விதிகள், 2023**

அனைத்து வகைத் தனியார் பள்ளிகளையும் நெறிப்படுத்தி கண்காணிக்க தமிழ்நாடு தனியார்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 2018 உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) விதிகள் 2023 (அரசிதழ் எண்.22 நாள்.13.01.2023) அரசால் வெளியிடப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டம் மற்றும் விதிகள் தனியார் பள்ளிகளில் தரமான கல்வி அளிப்பதையும் குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதையும் குழந்தைகளின் பாதுகாப்பினையும் உறுதி செய்கிறது. மேற்படி, சட்டம் மற்றும் விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களைப் பின்பற்றி தனியார் பள்ளிகளுக்குத் தொடக்க அனுமதி மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட்டு வருகிறது.

### 3.10. தனியார் பள்ளிகளுக்குக் கல்வி கட்டணம் நிர்ணயம் செய்தல்

கல்வி நிறுவனங்கள் மாணவர்களிடம் இருந்து கூடுதலான கல்விக் கட்டணம் மற்றும் நன்கொடை வசூலிப்பதைத் தடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப் படுத்துதல்) சட்டம், 2009 உருவாக்கப்பட்டது. இதன்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணயக்குழு மூலம் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் பெற்றோர்கள் / பாதுகாவலர்களிடம் பெறப்பட வேண்டிய கல்விக்கட்டணம் பள்ளிவாரியாக, வகுப்புவாரியாக 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிர்ணயம் செய்யப்பட்டு ஆணை வழங்கப்படுகிறது.

### 3.11. நிதி ஒதுக்கீடு

இவ்வியக்ககத்திற்கு 2024-25ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ரூ. 565.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# 4. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

## 4.1. முன்னுரை

மாநில அளவில் பள்ளிக் கல்வியின் தரத்தை உறுதி செய்வதில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்நிறுவனம் கலைத்திட்டம், பாடத்திட்டம், பாடப்புத்தகங்கள், கற்றல்பொருட்கள், மின்னணு வளங்கள், மாணவர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை, மதிப்பீடு மற்றும் மதிப்பீடு தொடர்பான பல்வேறு கூறுகள் ஆகியவை சார்ந்து தொடக்கக் கல்வி, பள்ளிக்கல்வி, தனியார் பள்ளிகள் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி முதலிய பல்வேறு இயக்ககங்களின் கல்வி முன்னெடுப்புகளுக்கு ஆதரவையும் மதிப்புமிக்க ஆலோசனைகளையும் வழங்குகிறது.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதி செய்தல், எல்லோருக்கும் எல்லா வயதிலும் நல்வாழ்வை மேம்படுத்துதல் (இலக்கு 3), அனைத்து



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

வயதினரையும் உள்ளடக்கிய தரமான கல்வியை வழங்குதல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதுமான கல்வி கற்றலுக்கான வாய்ப்பை ஊக்குவித்தல் (இலக்கு4), அமைதியான மற்றும் யாவரையும் உள்ளடக்கிய சமூகங்களை வளர்ப்பதில், அனைவருக்கும் நீதியை உறுதி செய்தல் மற்றும் அனைத்து நிலைகளிலும் திறமையான, பொறுப்பான மற்றும் உள்ளடக்கிய அமைப்புகளை உருவாக்குதல் (இலக்கு 16). ஆகிய நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

### 4.2. தொலைநோக்கு

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமானது மாணவர்கள் புதிய தொழில்நுட்ப உலகினைப் போட்டி மனப்பான்மையுடன் எதிர்கொள்ள உகந்தவர்களாக மாற்றும் வகையில் கற்றல் விளைவுகள், முழுமையான, மகிழ்வுடன் கற்றலுக்கான பல்வகைக் கற்பித்தல் நெறிமுறைகள், மாற்றுவழிக் கற்பித்தல் உத்திகள், இணையவழிக் கற்றல் மற்றும் உயர்நிலைச் சிந்தனைத்திறனை ஊக்குவிக்கும் வகையிலான மதிப்பீடு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

ஆகியவற்றின்படி பள்ளி அமைப்பை உருவாக்கு வதைத் தனது இலக்காகக் கொண்டுள்ளது.

4.3. நோக்கங்கள்

- மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப, கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டத்தினை காலமுறைப்படி சீராய்வு செய்தல்.
- தொழில்நுட்ப உள்ளீடுகள் மற்றும் துணைப் பொருட்கள், செய்திமடல்கள், இதழ்கள், கல்வி உபகரணங்கள், பல்லூடகப் பொருட்கள் கொண்ட பாடநூல்களை உருவாக்குதல்.
- மாணவ ஆசிரியர்களுக்கு தங்கள் திறன்களை வளர்த்துக்கொள்ள தரமான முன்பணி பயிற்சி வழங்குதல்.
- ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்குத் திறனை மேம்படுத்த, பணியிடைப் பயிற்சி அளித்தல்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

- மாவட்ட மற்றும் வட்டார அளவிலான நிருவாக அலுவலர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்.
- சிறந்த வகுப்பறைச் பரிவர்த்தனை செயல்முறைகளுக்கு உள்ளடக்கத்துடன் கற்றல் விளைவுகளை ஒருங்கிணைத்தல்.
- பள்ளிக் கல்வியின் பிரச்சனைகளைத் தீர்க்க ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல்.
- அமைப்பின் செயல்பாடுகளை மதிப்பிடுதல்

## 4.4. திட்டங்களும் செயல்பாடுகளும்

### *4.4.1. ஆசிரியர் பணித்திறன் மேம்பாடு*

இந்நிறுவனம் ஆசிரியர் பணித்திறன் மேம்பாட்டிற்காகப் பயிற்சித் தேவைகளைக் கண்டறிதல், வல்லுநர்களைக்கொண்டு ஆசிரியர் பணித்திறன் மேம்பாட்டிற்கான பாடப்பொருளை உருவாக்குதல், இணையவழியாகவும் நேரடியாகவும் பயிற்சிகள் வழங்குவதற்கு வடிவமைத்தல் ஆகியவற்றைச் செயல்படுத்துகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

*பணித்திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்*

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற் நிறுவனம், பின்வரும் திட்டங்களின் கீழ் பயிற்சி வழங்குகிறது.

- எண்ணும் எழுத்தும்: ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் அடிப்படை எழுத்தறிவு, எண்ணறிவுத் திறன்களை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் வாயிலாக, இடைநிலை ஆசிரியர்கள், வட்டார வளமைய ஆசிரியப் பயிற்றுநர்கள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள் என மொத்தம் 1,04,193 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

- ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி: ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடையே ஆங்கிலப் பேச்சுத் திறனை மேம்படுத்தும் வகையில், இத்திட்டம் கொண்டு வரப்பட்டது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

இதன்மூலம், வட்டார வளமைய ஆசிரியப் பயிற்றுநர்கள், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் என மொத்தம் 59,073 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

- நான் முதல்வன்: மாணவர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டி மற்றும் ஆலோசனை வழங்கும் நோக்கில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் என 2,037 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

- நிலைவாரியான கற்பித்தல் பயிற்சி: மாதிரி மற்றும் பொதுப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு நிலைவாரியான கற்பித்தல் பயிற்சி வழங்கப்பட்டது. இதன்மூலம், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் என 2,131 நபர்கள் பயனடைந்துள்ளனர்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

- மின்பாடப்பொருள் உருவாக்கம் மற்றும் மதிப்பீடு சார்ந்த பயிற்சி 165 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது.
- உள்ளடக்கிய கல்வியின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக 66,785 இடைநிலை ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது.
- சிறுவர் இதழ்கள்: பள்ளிக் கல்வித் துறையானது, மாணவர்களிடையே படைப்பாற்றலை மேம்படுத்தவும் படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கவும் சிறுவர்களுக்கான இதழ்களை மாதம் ஒருமுறை மற்றும் இருமுறை வெளியிடுகிறது. இதுசார்ந்து, மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் 85 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- வகுப்பறைக் கற்பித்தலில், தொல்லியல் சார்ந்த செய்திகளை ஒருங்கிணைக்கும் நோக்கில் தொல்லியல் சார்ந்த பயிற்சி



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

1,000 பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- பள்ளி மேலாண்மைத் திட்டத்தை வலுப்படுத்துவதற்காகப் பள்ளிகளுக்கு ஆதரவு அளிக்கவும் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்திற்குத் துணைசெய்யவும் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியின் மூலம் வட்டார வளமைய ஆசிரியப் பயிற்றுநர்கள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் என மொத்தம் 2,02,081 நபர்கள் பயனடைந்துள்ளனர்.
- தொடக்கப் பள்ளி ஆசிரியர்களிடையே ஆங்கிலத்தில் சரியான ஒலிப்புப் பயிற்சியை மேம்படுத்துவதற்காக 9,539 இடைநிலை ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

*ஆசிரியர் பணித்திறன் மேம்பாட்டிற்கான மாதாந்திர பயிற்சி*

ஒவ்வொரு மாதமும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு, குறுவள மையப் பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சியில், ஆசிரியர்களுடன் கலந்துரையாடுதல், கற்பித்தல் திறனை மேம்படுத்துதல், இணைந்து கற்பித்தல் ஆகிய செயல்பாடுகள் நடைபெறுகின்றன. இப்பயிற்சியின் மூலம், 2023 – 2024 ஆம் ஆண்டில் 294 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், வட்டார வளமைய ஆசிரியப் பயிற்றுநர்கள், தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் பயனடைந்தனர். மேலும், 77,687 இடைநிலை ஆசிரியர்கள் 20,551 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களும் பயனடைந்துள்ளனர்.

*பயிற்சியாளர்களுக்கான பயிற்சி (ToT)*

பயிற்சியாளர்களுக்கான பயிற்சிகளில் ஆசிரியர்களுக்குக் கற்பித்தல் முறைகள், பாடப்பொருள்கள், நூலகப் பயன்பாடுகள், வழிகாட்டுதல்கள் ஆகியவை வழங்கப்படுகின்றன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

மாதிரி மற்றும் பொதுப்பள்ளிகளில் நடத்தப்பெற்ற இந்த முன்னெடுப்பு முயற்சியின்மூலம், பாடவாரியாக 50 ஆசிரியர்களுக்குப் பயிற்சியும் மாணவர்களின் கற்றல் அடைவுகளை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக, 2023-24ல் 200 இடைநிலை ஆசிரியர்கள், 484 பட்டதாரி மற்றும் 996 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர்.

*<u>பள்ளி முன்பருவக் கல்வி (LKG மற்றும் UKG) ஆசிரியர்களுக்குப் பயிற்சி</u>*

இந்நிறுவனம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து, பள்ளி முன்பருவக் கல்வி (LKG மற்றும் UKG) வகுப்புகளைக் கையாள்வதற்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டது. குழந்தைகளின் அடிப்படைத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், வட்டார வளமைய ஆசிரியப் பயிற்றுநர்கள் என 76 நபர்கள் முதன்மைக் கருத்தாளர்களாக அடையாளம் காணப்பட்டு மூன்று நாள்கள் பயிற்சி அளித்துள்ளனர். இப்பயிற்சியின் மூலம் 2381 ஆசிரியர்கள்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

பயனடைந்துள்ளனர். மொழி வளர்ச்சி, அறிவாற்றல், உடலியக்கத் திறன், சமூக உணர்ச்சி, அழகியல் மற்றும் படைப்பாற்றல் கலை ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் இப்பயிற்சி வழங்கப்பட்டது.

### *4.4.2. அலுவலர்களுக்கான திறன் மேம்பாடு மற்றும் நிருவாகப் பயிற்சி*

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், முதன்மையான கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, கல்வி மற்றும் தொழில்முறைத் திறன்கள் இரண்டிலும் கல்வியாளர்களின் தலைமைத்துவம் மற்றும் நிருவாகத் திறன்களை மேம்படுத்துவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் வாயிலாக, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திலிருந்தும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களிலிருந்தும் 450 கல்வியாளர்கள் பயனடைந்துள்ளனர். 2023-24ஆம் கல்வியாண்டில், 38 முதன்மைக் கல்வி அலுவலர்கள், 2488 மேல்நிலைப்பள்ளி & 2503 நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள், 2 முதன்மை உடற்கல்வி ஆய்வாளர்கள் மற்றும் 38 மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் ஆகியோருக்கு பல்வேறு கூறுகளை



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

உள்ளடக்கிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

*4.4.3. மதிப்பீட்டுப் புலம்*

மாணவர்களின் வயதுக்கேற்றவாறு தரமான வினாக்களை உருவாக்குவதற்காக மதிப்பீட்டுப் புலம் நிறுவப்பட்டுள்ளது. இது கேள்விகளின் புறநிலை, திறன் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, மேலும் அவற்றை மாணவர் மதிப்பீடு மற்றும் கல்விக்கான விலைமதிப்பற்ற கருவியாக மாற்றுகிறது. மாணவர்களின் புரிதலை ஊக்குவிக்கும் வகையில் அறிதல், புரிதல் மற்றும் பயன்பாட்டு நிலை வினாக்களை உருவாக்குவதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்குமான திறனை ஆசிரியர்களுக்கு வளர்ப்பதில் மதிப்பீட்டுப் புலம் கவனம் செலுத்துகிறது.

உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் கொண்ட 6,029 பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் பல்வேறு நிலை வினாக்களை உருவாக்குதல் மற்றும் அவற்றைப் பதிவேற்றும் முறைகள் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சி பெற்றனர். பயிற்சியின் முடிவாக,



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

2,11,276 வினாக்கள் உருவாக்கப்பட்டன. 6,591 நடுநிலைப் பள்ளிகளில் மூன்று பருவங்களுக்கும் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் மூலம் தேர்வுகள் நடத்தப்பட்டன. மையப்படுத்தப்பட்ட தரவு மேலாண்மை மாணவர் முன்னேற்றத்தைத் திறம்பட கண்காணிக்க உதவுவதோடு கல்வி அமைப்பின் பல்வேறு நிலைகளில் தரவுசார்ந்த முடிவுகளை எடுப்பதற்கும் உதவுகிறது.

தேசிய அளவிலான மதிப்பீடுகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்தவும், திறன்களை மேம்படுத்தவும், மாதாந்திர திறன் அடிப்படையிலான மதிப்பீட்டுத் தேர்வுகள் மற்றும் வினாடி வினாக்கள் 13,209 அரசுப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் மூலம் நடத்தப்பட்டன. கல்வி மதிப்பீட்டு நடைமுறைகளில் தொடர்ச்சியான முன்னேற்றம் அடையச் செய்வதை நோக்கமாகக் கொண்டு, வழக்கமான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

### *4.4.4. மனநலம் மற்றும் வாழ்வியல் திறன் சார்ந்த பயிற்சி*

வளரிளம் பருவத்தினர் பெருந்தொற்றுக் காலத்தில் உளவியல் ரீதியாகப் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்துள்ளனர். அதனை ஈடுசெய்யும் வகையில், அவர்களின் சமூக மனவெழுச்சி நலனை மேம்படுத்தவும், நேர்மறை எண்ணங்களை உருவாக்கிடவும், மகிழ்ச்சியாகக் கற்றலில் ஈடுபடுவதற்கு ஏதுவாகவும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு மனநலம் மற்றும் வாழ்வியல் திறன் பயிற்சி வழங்கப்பட்டது. யுனிசெஃப் நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கப்பட்ட மாணவர்களுக்கான கையேட்டில் இருந்து மின்னுருவாக்கம் செய்யப்பட்ட 30 செயல்பாடுகளைக் கல்வித் தகவல் மேலாண்மைத் தொகுப்பமைப்புத் தளத்தில் உள்ளீடு செய்து அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் அமைந்துள்ள உயர்தொழில் நுட்ப ஆய்வகத்தின் மூலமாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

இத்திட்டமானது, மாணவர்களிடையே சிக்கலான சூழல்களைத் துணிவுடன் எதிர்கொள்ளும் திறனையும் சரியான முடிவெடுக்கும் திறனையும் மேம்படுத்துகிறது. இதன் மூலம், 2023–24ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் 9 முதல் 12 வகுப்பு வரையிலான பள்ளிகளில் பயலும் 17,13,604 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

### *4.4.5. ஆங்கிலப் பேச்சுத் திறனை மேம்படுத்துதல் – மொழிகள் தளம்*

இன்றைய உலகமயமாக்கப்பட்ட சூழலில், கல்வியில் சாதிக்கவும், போட்டித் தேர்வுகளில் வெற்றிபெறவும், உயர் கல்வி தகுதி மற்றும் அதிக ஊதியம் பெறும் வேலைவாய்ப்புகளைப் பெறவும் ஆங்கிலத்தில் உரையாடும் திறன் அவசியமாகும். மேலும் கோவிட் தொற்று கற்றல் இழப்பை அதிகரித்ததால் ஆங்கில மொழிக்கான கற்றல் சூழ்நிலையை மேம்படுத்துவது அவசியமாகிறது. இதைச் சரிசெய்வதற்காக தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை, அரசுப் பள்ளிகளில் உயர்தொழில் நுட்ப ஆய்வகங்களை (Hi–Tech Laboratory) பயன்படுத்தி "மொழிகள் தளம்" மூலம் மொழி



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

ஆய்வகத்திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது. கேட்டல், பேசுதல், படித்தல் மற்றும் எழுதுதல் (LSRW) திறன்களில் கவனம் செலுத்துவதன் மூலம் மாணவரின் கற்றல் வேகத்திற்கேற்ப, கலந்துரையாடல் மின்தளத்தில் செயல்பாடுகள் மூலம் ஆங்கில வகுப்புகள் இந்த இணையத்தளத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

6 முதல் 8 வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு வாராந்திர மொழி ஆய்வகப் பாடவேளை இதற்காக பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. மாணவர்கள் கதைகள் கேட்பதற்கும், காணொலிகள் காண்பதற்கும், தங்கள் குரலைப் பதிவு செய்து கேட்பதற்கும் வழிவகுக்கிறது. ஒவ்வொரு செயல்பாட்டை முடித்தவுடன் மாணவர்களை ஊக்குவிக்க நட்சத்திரக் குறியீடுகளும் புள்ளிகளும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் 14,000 ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் 9,00,000 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## 4.5. கற்றல் இழப்புகளைக் குறைப்பதற்கான சிறப்பான முன்னெடுப்புகள்

### *4.5.1. எண்ணும் எழுத்தும்*

தொடக்க வகுப்புக் குழந்தைகள் அனைவரும் எட்டு வயதிற்குள் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்களைப் பெறுவதை உறுதிசெய்யும் வகையில் தொடங்கப்பட்ட எண்ணும் எழுத்தும் திட்டம், தொடர்முன்னேற்றத்துடன் நடைமுறையில் உள்ளது. நிலைவாரியான அணுகுமுறையில் குழந்தைகளின் கற்றல் நிலையை உறுதிசெய்த வகையில், இத்திட்டம் 2023–24இல் 4 மற்றும் 5ஆம் வகுப்புகளுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. இந்த விரிவாக்கம் ஒவ்வொரு தொடக்கபள்ளிக் குழந்தையும் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்களில் சிறந்து விளங்குவதற்கான (நிலைத்த வளர்ச்சிக் குறிக்கோள் SDG4) வாய்ப்பையும் எதிர்காலக் கல்வியில் வெற்றியடைவதையும் மீண்டும் உறுதிசெய்கிறது.

எண்ணும் எழுத்தும் துணைக்கருவிகள், மாணவர் பயிற்சி நூல், ஆசிரியர் கையேடு ஆகியன



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

பல்வேறுபட்ட வகுப்பறைச் செயல்பாடுகளின்வழி, குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கையையும் படைப்பாற்றலையும் வளர்க்கின்றன. எண்ணும் எழுத்தும் செயலி வழியாக நடத்தப்படும் வளரறி மதிப்பீடு ஏறக்குறைய 80% குழந்தைகளின் பங்கேற்பையும் அவர்கள் கற்றல் நிலையில் தேர்ச்சி பெற்றுள்ளதையும் காட்டுகிறது. தொகுத்தறி மதிப்பீடானது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் பின்னூட்டத்தின் அடிப்படையில் எழுத்துத் தேர்வாக நடத்தப்படுகிறது. எல்லா நிலைகளிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வுடன் இத்திட்டத்தைச் செயல்படுத்த, மாதாந்திர மீளாய்வுக்கான தரஅளவீடுகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

மேம்படுத்தப்பட்ட மாணவர் முன்னேற்ற அறிக்கை முறையை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதால் 16 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களும் பெற்றோர்களும் பயனடைந்துள்ளனர். மேலும் ஆசிரியர் – பெற்றோர் ஒத்துழைப்பும் நல்லுறவும் மேம்பட்டுள்ளது. எண்ணும் எழுத்தும் விழா போன்ற சமூகப் பங்கேற்பு முன்னெடுப்புகள்,



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

குழந்தைகள் தங்கள் கற்றல் திறன்களை வெளிப்படுத்தவும் கல்விச் சூழலுக்குள் பிணைப்பை வலுப்படுத்துவதற்குமான களங்களாக அமைகின்றன.

எண்ணும் எழுத்தும் திட்டத்தின் செயல்திறனை அறிய மூன்றாம் நபர் தரமதிப்பீடு மற்றும் முன்னேற்றத்திற்கான தொடர் மதிப்பீடுகள் நடத்தப்படுகின்றன. இதில் பெறப்படுகின்ற குறிப்பிடத்தக்க ஆலோசனைகள் அடுத்துவரும் ஆண்டில் உருவாகும் ஆசிரியர் கையேடுகள், மாணவர் பயிற்சி நூல்களில் பயிற்சிகளை மேம்படுத்த உதவுகின்றன.

### *4.5.2. இல்லம் தேடிக் கல்வி*

கோவிட்–19 பெருந்தொற்றுக் காலத்தின்போது 19 மாதங்களாகப் பள்ளிகள் மூடப்பட்டதால் கற்றலில் ஏற்பட்ட இழப்பைக் குறைக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இரண்டு ஆண்டுகள் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில் குழந்தைகளின் கற்றல் இடைவெளியைக் குறைக்கப் போதுமானதாக இல்லாததால் அரசு இத்திட்டத்தை மேலும் நீட்டித்துள்ளது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

மற்றும் பயிற்சி நிறுவனத்தால் தன்னார்வலர் கையேடு மற்றும் கற்றல் கற்பித்தல் வளங்கள் தயாரித்து வழங்கப்பட்டன. தொடக்க நிலை மாணவர்களின் கற்றல் நிலை முன்னேற்றத்தைக் கண்காணிக்க, மாணவர் அடைவு அட்டை தன்னார்வலர் கையேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறையின் மூலம், குழந்தைகள் ஈடுபாட்டுடன் சுதந்திரமாகவும், துடிப்புடனும் வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

4.6. மாநில வள மையம்

மாநில வள மையம் நவீன கற்பித்தல் முறைகள் மற்றும் ஆசிரியர் பணித்திறன் மேம்பாடு ஆகியவற்றிற்கு இடையேயான ஓர் இணைப்புப் பாலமாக விளங்குகிறது. ஆசிரியர் பணியில் தொடர் வளர்ச்சியின் அவசியத்தை உணர்ந்து பணிமேம்பாட்டிற்கான ஏராளமான வாய்ப்புகளை இம்மையம் வழங்குகிறது. இவ்வளமையமானது ஆசிரியர்களுக்கு புதுமையான அனுபவங்களைத் தருவதுடன், கல்வியில் புதிய அணுகுமுறைகளையும் கோட்பாடுகளையும் அறிந்துகொள்ள வழிவகுக்கிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

மேலும், தாங்கள் அறிந்துகொண்ட புதிய உத்திகளை வகுப்பறையில் செயல்படுத்துவது பற்றிய ஆழமான புரிதலையும் வழங்குகிறது. இவை அனைத்தும், தகவல் தொழில்நுட்ப ஆய்வகம், மொழி ஆய்வகம் மற்றும் எண்ணும் எழுத்தும் திட்டத்தைச்சார்ந்து, ஒவ்வொரு பாடத்திற்குமான அறைகள், புதுமை மையம் (Innovation Hub), STEM & DIY ஆகியவற்றின் மூலமாகச் செயல்படுத்தப்படுகின்றன. இந்த மாநில வளமையத்தில் சிறப்புத் தேவையுடைய குழந்தைகளுக்கும் ஆய்வகம் உள்ளது.

## 4.7. ஆராய்ச்சிச் செயல்பாடுகள்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட மாநில ஆய்வுக்குழுவானது ஆசிரிய பயிற்றுநர்கள் மற்றும் ஆசிரியர்களின் பள்ளிப் பார்வை, பணியிடைப் பயிற்சியினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட கல்வி ஆராய்ச்சிகளை மீளாய்வு செய்து வருகிறது. இம்மாநில ஆராய்ச்சிக் குழுவானது மாவட்ட ஆராய்ச்சிக் குழுவிற்குத் தரமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறது. மாவட்ட அளவில்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க ஆராய்ச்சியானவை பாடத்திட்டப் பகுதிகள், கற்பித்தல் நடைமுறைகள், கற்றல் செயல்முறை, ஆங்கிலம் பேசும் திறன், பெண்கள் கல்வி, குழந்தை பாதுகாப்பு, குழந்தை உரிமைகள், மதிப்பீடு, தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை பகர்தல், நான் முதல்வன் திட்டம், எண்ணும் எழுத்தும், இல்லம் தேடிக் கல்வி, கலையரங்கம் மற்றும் பள்ளிகளில் மன்றச்செயல்பாடுகள் போன்ற களங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2023–24 ஆம் கல்வியாண்டில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்களால் 284 செயலாராய்ச்சிகளும், 134 மாவட்ட அளவிலான ஆராய்ச்சித் திட்டங்களும், 4 சிறப்பு செயல்திட்ட ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிறுவனத்தால் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ரூபாய் 1.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.8. தொழிற்கல்வி மறுசீரமைப்பு

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து, மாணவர்கள் கற்றல் அனுபவம் மற்றும் தொழில்துறையின் வெளிப்பாட்டைப் பெறுவது



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

ஆகியவற்றை மையமாகக் கொண்டு 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான தொழிற்கல்வி பாடத்திட்டம் மற்றும் பாடப்புத்தகங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டன. எதிர்காலத் தலைமுறையினரின் மேல்நோக்கிய வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பை மேம்படுத்த, 8 தொழிற்கல்வி பாடங்களின் பாடத்திட்டம் மற்றும் பாடப்புத்தகம் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. தொழிற்கல்விப் பாடம் சார்ந்து 6 ஆவது பாடமாக "வேலைவாய்ப்புத் திறன்கள்" என்னும் புதிய பாடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது தகவல் தொடர்புத் திறன், கணினிசார் திறன், தொழில் முனைவோருக்கான திறன் முதலான மென் திறன்களில் கவனம் செலுத்துகிறது.

குறிப்பிட்ட துறையைச் சேர்ந்த திறமையான தொழில்முனைவோர்/பயிற்சியாளர் அழைக்கப்பட்டு 451 பள்ளிகளுக்கு 2155 சிறப்பு விரிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. தொழில்துறை செயல்பாடுகளை வெளிக்கொணர, ஒவ்வொரு கல்வியாண்டிலும் மூன்று முறை களப்பயணங்கள் நடத்தப்படுகின்றன. 451 பள்ளிகளுக்கு 1200க்கும் மேம்பட்ட தனிப்பட்ட



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

தொழில்துறைப் பார்வையிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கற்கும் உலகிற்கும் வேலை செய்யும் உலகிற்கும் இடையேயுள்ள இடைவெளியைக் குறைக்க 11 மற்றும் 12 வகுப்பின்போது ஒரு மாணவர் குறைந்தபட்சம் 160 மணிநேர உள்ளுறைப் பயிற்சியைப் பெறுவார். பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள் 13185 பேரும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்கள் 14306 பேரும் 2023–24 ஆம் கல்வி ஆண்டில் 1268 நிறுவனங்களில் தங்கள் உள்ளுறைப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்துள்ளனர். பாடத்திட்டத்தை வெற்றிகரமாக முடித்த பிறகு, ஒவ்வொரு மாணவரும் தொழில்துறையால் அங்கீகரிக்கப்பட்ட திறன் நிறைவுச் சான்றிதழைப் பெறுவார்கள்.

## 4.9. உயர்கல்வி வழிகாட்டி மற்றும் ஆலோசனைத் திட்டம்

அரசுப் பள்ளிகளில் பயில்கின்ற மாணவர்களுக்குத் தாம் எதிர்காலத்தில் தேர்ந்தெடுக்கும் உயர்கல்வி பற்றி அறிந்துகொள்வதற்கு உதவும் வகையில் பள்ளிக் கல்வித்துறை, உயர்கல்வி வழிகாட்டல் திட்டத்தைக்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

கொண்டு வந்துள்ளது. இத்திட்டமானது, 9 முதல் 12ஆம் வகுப்புவரை பயில்கின்ற மாணவர்களுள் உயர்கல்வி பயில்வோரின் மொத்தப் பதிவு விகிதத்தை உயர்த்துவதையும் அவர்களுக்குத் தேவையான வாழ்வியல் திறன்களையும் மென்திறன்களையும் வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், இதனைக் கவனத்திற்கொண்டு, 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்புவரையிலான மாணவர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டி மற்றும் ஆலோசனை வளநூலை உருவாக்கி, அவர்களுக்கு வழங்கியுள்ளது. இந்த வளநூலில் மாணவர்கள் தங்களின் ஆர்வம் மற்றும் ஈடுபாட்டிற்கேற்ப, பல்வேறு உயர்கல்வி பற்றிய வாய்ப்புகள், NEET, JEE, CLAT போன்ற நுழைவுத்தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கான முன்னேற்பாடுகள், வேலைவாய்ப்புகள், போட்டித்தேர்வுகள் மற்றும் உதவித்தொகைகள் பெறுவதற்கான முன்தயாரிப்புகள் ஆகியவற்றை அறிந்துகொள்ளும் வகையில் தகவல்கள் இடம்பெற்றுள்ளன. இந்த வளநூலிலுள்ள தகவல்களை மாணவர்களுக்கு கொண்டு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

சேர்க்கும்வகையில், 250 மாணவருக்கு ஓர் ஆசிரியர் என்னும் விகிதத்தில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் மாணவர்களுக்குத் தொடர்ச்சியாகத் தகவல்களை அளிக்கும் வகையில், உயர்கல்வி வழிகாட்டி மற்றும் ஆலோசனைக் குழு நிறுவப்பட்டுள்ளது.

உயர்கல்வி வேலைவாய்ப்புகள் குறித்து அறிந்துகொள்வதற்காகவும் பணித்திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் நான் முதல்வன் என்னும் வலைத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுத் திறன் மேம்பாட்டுக் கழகத்தின் வல்லுநர்கள் துணையுடன் உயர்கல்வி வழிகாட்டி சார்ந்து காணொலிகள் தயாரிக்கப்பட்டு, கல்வித் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகின்றன. 12ஆம் வகுப்பு மாணவர்கள், கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு உயர்கல்வி சார்ந்த தகவல்களைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. கல்லூரிக் கனவு முகாம் மூலம், பல்வேறு காரணங்களால் உயர்கல்வி நிறுவனத்தில் சேராத மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு,



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

மீண்டும் உயர்கல்வியில் சேர்ந்து படிப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. 2023–24ஆம் கல்வியாண்டில், 7,91,487 மாணவர்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர்.

### 4.10. மின்பாடப்பொருள் புலம்

மின் பாடப்பொருள் புலம், மாணவர்களிடையே கற்றலில் மகிழ்ச்சியுடன் கூடிய ஈடுபாட்டினை ஏற்படுத்துகிறது. வகுப்பறைகளைச் செயல்வழிக் கற்றல் சூழலாக மாற்ற, தொடக்கப் பள்ளிகளில் திறன்மிகு பலகை வசதிகள் (Smart board) ஏற்படுத்தப்பட்டுள்ளன. திறன்மிகு வகுப்பறை (Smart class) மாணவர்களுக்குப் பல்லூடகப் பாடப்பொருள், ஊடாடும் வெள்ளைப் பலகை (interactive white board) மற்றும் கல்விச் செயலிகள் மூலம் ஊடாடும் கற்றல் அனுபவங்களை வழங்குகிறது. திறன்மிகு வகுப்பறைகள் ஒவ்வொரு மாணவருக்கும் அவர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப கற்றல் அனுபவங்களை எளிமையாக்குகிறது. ஆசிரியர்கள், நிலைவாரியான கற்பித்தலை மேற்கொள்ள தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

இந்நிறுவனமானது, திறன்மிகு பலகைகளுக்கான பல்லூடகப் பாடப்பொருட்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. புத்தகப் பூங்கொத்துக் கதைகளை மின்னுரு மயமாக்கி மின் நூலகமும் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் அறிவியல் மற்றும் கணிதக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு இதுவரை 45 இயங்குபடக் கதைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்நிறுவனம், 545 காணொலிகள் அடங்கிய ஆற்றல் மிக்க ஆசிரியர் கையேடு ஒன்றை வெளியிட்டுள்ளது. இசைநயத்துடன் கூடிய பாடல்களும் (ஆசிரியர் கையேட்டில்) இடம்பெற்று. மாணவர்கள் இசையுடன் பாடலைப் பயிற்சி செய்ய இது உதவும். அசைவூட்டக் காணொலிகள் வகுப்பறைக் கற்பித்தலில் ஆசிரியருக்கு உற்சாகத்தை அளிக்கிறது. ஒலிப்பு அட்டைகள் திறன்மிகு பலகைகளில் பயன்படுத்தப்பட்டு, மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும். உச்சரிப்பை மேம்படுத்த உதவுகின்றன. ஆற்றல் மிக்க ஆசிரியர் கையேட்டிலுள்ள உள்ள வகுப்பறைச் செயல்விளக்கக் காணொலிகள் வகுப்பறைகளில்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

செயல்பாடுகளைச் செய்வதற்கு ஆசிரியர்களுக்கு உதவுகின்றன.

**4.11. மெய்ந்நிகர் ஒளிப்பதிவுக் கூடங்களும் ஒளிபரப்பும்**

பள்ளிக் கல்வித்துறைக்கெனத் தனித்துவத்துடனும் அதிநவீன வசதிகளுடனும் நான்கு உயர் தொழில்நுட்பப் படப்பதிவுக் கூடங்கள் மற்றும் ஒரு மெய்ந்நிகர் ஒளிப்பதிவுக்கூடம் ஆகியவை புதிதாக நிறுவப்பட்டுள்ளன. கற்றல் அனுபவத்தை மேம்படுத்தப் புதுமையான கருவிகள் மற்றும் சூழல்களை வழங்குவதன் மூலம் கல்விக்கான பல்துறை ஊடகப்பதிவுகளை உருவாக்குவதில் இம்மெய்ந்நிகர் ஒளிப்பதிவுக் கூடங்கள் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன. மெய்ந்நிகர் ஒளிப்பதிவுக்கூடங்கள் அதிவேகக் கற்றலுக்கான சூழல்களை உருவாக்குகின்றன. மேலும், மாணவர்கள் மின்னுரு உள்ளடக்கத்துடன் தொடர்பு கொள்ளக்கூடிய அதிவேகக் கற்றலுக்கான சூழல்களை உருவாக்குகின்றன. முப்பரிமாண இயங்குபடங்கள், உருவகப்படுத்துதல்கள் மற்றும் மெய்ந்நிகர் மாதிரிகள் மூலம் 1 முதல் 12 ஆம் வகுப்பு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

வரையிலான பாடப்பொருள்கள் காணொலிகளாக உருவாக்கப்பட்டுக் கல்வித் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பப்படுகிறது.

அரசுப் பள்ளிகளில் JEE மற்றும் NEET தேர்வெழுத விரும்பும் மாணவர்களுக்கு உதவும் வகையில் முந்தைய ஆண்டு வினாத்தாள்களுக்கான தீர்வுகள் பற்றிய காணொலிகள் தயாரிக்கப்பட்டுக் கல்வித் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் சிறப்பு முயற்சிகளான நான் முதல்வன் திட்டம், வானவில் மன்றம், கலைத்திருவிழா, நம்ம பள்ளித் திட்டம், நம் பள்ளி நம் பெருமைத் திட்டம், மாபெரும் தமிழ்க்கனவுத் திட்டம் ஆகியவற்றை ஆவணப்படுத்தும் பணியிலும் கல்வித் தொலைக்காட்சி உறுதுணையாக உள்ளது. இக்கல்வித் தொலைக்காட்சி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் இதரப் போட்டித் தேர்வுகளுக்கான காணொலிகளை உருவாக்குவதற்கு உதவிபுரிவதன் மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

தேர்வுகளை எழுத விரும்புவோர் தமது இலக்கை அடைவதற்கு உதவுகிறது. இதுவரை சுமார் 1350 காணொலிகள் உருவாக்கப்பட்டு ஒளிபரப்பப் பட்டுள்ளன.

## 4.12. நிதி ஒதுக்கீடு

அரசால் இந்நிறுவனத்திற்கு 2024 – 25 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ரூ.186.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# 5. அரசுத் தேர்வுகள்

## 5.1. அறிமுகம்

அரசுத் தேர்வுகள் இயக்ககம் தோற்றுவிக்கப்பட்ட 1975 ஆம் ஆண்டு முதல் காலத்திற்கேற்பப் புதுமையான நடவடிக்கைகளின் மூலம் பல்வேறு தேர்வுகளை நடத்துவதோடு அவற்றின் தரத்தினையும் மேம்படுத்தி வருகிறது. அரசுத் தேர்வுகள் இயக்ககம், ஆண்டுதோறும் நான்கு வகையான பொதுத் தேர்வுகள், ஐந்து வகையான படிப்புதவித்தொகைத் தேர்வுகள் மற்றும் 28 வகையான பிற தேர்வுகள் ஆகியவற்றை நடத்தும் உயரிய பொறுப்பினை ஏற்றுள்ளது.

## 5.2. நோக்கம்

தேர்வுகளை நடத்தும் முறைகளை எளிமையாக்குதல், விடைத்தாள்கள் மதிப்பீட்டில் நேர்மைத்தன்மையை உறுதிப்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்தி தேர்வு முடிவுகள் அறிவிப்பதற்கான பணிகளை விரைந்து செயல்படுத்துதல் ஆகியவற்றை இவ்வியக்ககம் நோக்காகக் கொண்டுள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## 5.3. குறிக்கோள்கள்

- தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறுவது முதல் தேர்வு முடிவுகள் வெளியிடப்படுவது வரையிலான அனைத்திலும் மின்னணுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துதல்
- அனைத்து வகையான தேர்வுகளையும் வெளிப்படைத் தன்மையுடனும் பாதுகாப்பான சூழலிலும் நடத்துதல்.
- வினாத்தாட்கள் வடிவமைப்பில் புதுமையான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் மாணவர்கள் எதிர்காலத்தில் போட்டித் தேர்வுகளை எதிர்கொண்டு உயர்கல்வி அல்லது வேலை வாய்ப்புகள் பெறுவதை எளிமையாக்குதல்.
- விடைத்தாட்கள் மதிப்பீட்டு முறையை வலுப்படுத்துதல்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

- மாணவர்கள் உயர்கல்வி பயில்வதற்காக, குறித்த காலத்தில் தேர்வு முடிவுகளை வெளியிடுதல் மற்றும் தேர்வர்களுக்கான தக்க சான்றிதழ்களை வழங்கிடுதல்.

## 5.4. பொதுத்தேர்வுகள்

### *5.4.1. இடைநிலை/மேல்நிலை பொதுத்தேர்வு*

அரசு தேர்வுகள் இயக்ககத்தால் மார்ச்/ஏப்ரல் 2024–ல் இடைநிலை (பத்தாம் வகுப்பு) பொதுத்தேர்வு தேர்வெழுத மொத்தம் 12,616 பள்ளிகளிலிருந்து 9,10,024 மாணாக்கர்களும், மேல்நிலை முதலாமாண்டு (11ஆம் வகுப்பு) பொதுத்தேர்வு தேர்வெழுத 7,534 பள்ளிகளிலிருந்து 8,20,207 மாணாக்கர்களும், மேல்நிலை இரண்டாமாண்டு (12ஆம் வகுப்பு) பொதுத்தேர்வு தேர்வெழுத 7,534 பள்ளிகளிலிருந்து 7,72,200 மாணாக்கர்களும் விண்ணப்பித்ததன் அடிப்படையில் 2023–24ஆம் ஆண்டு பொதுத் தேர்வுகள் நடத்தப்பட்டு தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

*5.4.2. தொடக்கக் கல்விப் பட்டயத் தேர்வு*

அரசு தேர்வுகள் இயக்ககத்தால் தொடக்கக்கல்வி பட்டயத் தேர்வு நடத்தப்படுகிறது. ஜூன்/ஜூலை 2023-இல் நடைபெற்ற தொடக்கக்கல்வி பட்டயத் தேர்வின் முதல் மற்றும் இரண்டாமாண்டு தேர்வுகளை 4,598 தேர்வர்கள் தேர்வெழுதியுள்ளனர்.

**5.5. படிப்புதவித் தொகைத் தேர்வுகள்**

*5.5.1. தமிழ்நாடு முதலமைச்சர் திறனறித் தேர்வு :*

அரசுப் பள்ளி மாணவ, மாணவியர்களின் திறனைக் கண்டறிவதற்கும் அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் அரசுப்பள்ளிகளில் பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு 2023-2024-ஆம் கல்வியாண்டு முதல் "தமிழ்நாடு முதலமைச்சர் திறனறித் தேர்வு" நடத்தப்படுகிறது. இத்தேர்வில் 500 மாணவர்கள், 500 மாணவியர்கள் உள்ளிட்ட மொத்தம் 1000 மாணாக்கர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஊக்கத்தொகையாக ஒரு கல்வியாண்டிற்கு ரூ.10,000/- (மாதம் ரூ.1000/- வீதம் ஒரு கல்வியாண்டிற்கு 10 மாதங்களுக்கு மட்டும்)



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

இளநிலை பட்டப்படிப்பு வரை வழங்கப்படும். 07.10.2023 அன்று நடைபெற்ற இத்தேர்வில் 1,27,673 மாணாக்கர்கள் பங்கேற்றனர்.

### *5.5.2. தமிழ் மொழி இலக்கியத் திறனறித் தேர்வு :*

பள்ளி மாணவர்களின் தமிழ் மொழி இலக்கியத் திறனைக் கண்டறிந்து மேம்படுத்தும் வகையில் இத்தேர்வில் 750 அரசுப் பள்ளி மாணவர்களும், அரசுப் பள்ளி மாணவர்கள் உள்ளிட்ட பிற தனியார் பள்ளி மாணவர்கள் என 750 மாணவர்களும் என மொத்தம் 1500 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ஊக்கத்தொகையாக மாதம் ரூ.1500/– வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. அக்டோபர் 2023–இல் நடைபெற்ற தமிழ் மொழி இலக்கியத் திறனறித் தேர்வினை 2,20,878 மேல்நிலை முதலாமாண்டு (+1) மாணவர்கள் எழுதினர்.

### *5.5.3. தமிழ்நாடு ஊரகப் பகுதி திறனாய்வுத் தேர்வுத் திட்டம் (Trust Exam)*

தமிழ்நாட்டிலுள்ள கிராமப்புறங்களில் படிப்பில் சிறந்து விளங்கும் மாணவர்களின் திறமையை ஊக்குவிக்கும் வகையிலும், மேல்நிலைக் கல்வியை



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

தொடரச் செய்யும் நோக்கிலும் இத்திட்டம் 1991-92 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்படும் இத்தேர்வில் தேர்ச்சி பெற்று 12ஆம் வகுப்பு வரை தொடர்ந்து பயிலும் மாணவர்களுக்கு நான்கு ஆண்டுகளுக்கு ஆண்டிற்கு ரூ.1000 வீதம் வழங்கப்படுகிறது. 2023-24ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தின் மூலம் 4130 மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

### *5.5.4. தேசிய வருவாய் வழி மற்றும் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்வு (NMMS)*

எட்டாம் வகுப்பில் 55 சதவிகித மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்கள் இடைநிலைப் படிப்பைத் தொடர்வதை ஊக்குவிக்கும் வகையில் ஒன்றிய அரசால் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான தேர்வு தமிழ்நாடு அரசால் நடத்தப்படுகிறது. தகுதிபெறும் மாணவர்களுக்கு 9 முதல் 12 வகுப்பு வரையிலான நான்கு ஆண்டுகளுக்கு ஆண்டொன்றிற்கு ரூ. 12,000 வீதம் கல்வித் உதவித் தொகை வழங்கப்படுகிறது. 2023-24ஆம்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

கல்வியாண்டில் தமிழ்நாட்டில் 5890 மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை பெறத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## 5.6. பல்வேறு வகையான தேர்வுகள் நடத்துதல்

### *5.6.1. எட்டாம் வகுப்புத் தேர்வு (தனித்தேர்வர்கள்)*

குறைந்தபட்ச எட்டாம் வகுப்புக் கல்வித் தகுதியினை அளிக்கும் வகையில், நேரடித் தனித்தேர்வர்களுக்கு எட்டாம் வகுப்புத் தேர்வு இவ்வியக்ககத்தால் நடத்தப்படுகிறது. ஆகஸ்ட் 2023 –இல் நடத்தப்பட்ட எட்டாம் வகுப்புத் தேர்வில் 3,246 தனித்தேர்வர்கள் தேர்வெழுதியுள்ளனர்.

### *5.6.2. நான் முதல்வன் UPSC முதல்நிலை படிப்புதவித் தொகைத் தேர்வு*

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்காக (TNSDC) "நான் முதல்வன் UPSC முதல்நிலை படிப்புதவித் தொகைத் தேர்வினை" அரசு தேர்வுகள் இயக்ககம் நடத்துகிறது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் 1,000 **UPSC** குடிமைப்பணி போட்டித்தேர்வர்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் (TNSDC) தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

ஒவ்வொரு பயனாளிக்கும் முதல்நிலைத் தேர்வுக்கு ஆயத்தப்படுத்துவதற்காக மாதம் ரூ.7,500/- வீதம் 10 மாதங்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் (TNSDC) வழங்கப்படும். செப்டம்பர்-2023இல் நடைபெற்ற இப்படிப்புதவித் தொகைத் தேர்வில் 32,624 போட்டித்தேர்வர்கள் பங்கேற்று தேர்வெழுதியுள்ளனர்.

### *5.6.3. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) மற்றும் மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் (SSC) தேர்வுகளை நடத்துதல்*

ஆண்டுதோறும் "மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம்" மற்றும் "மத்திய பணியாளர் தேர்வாணையத்தால்" சென்னையில் நடத்தப்படும் தேர்வுகளுக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்பட்டு தேர்வுகளை நடத்துகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## 5.7. மாணவர்கள் நலன்

### *5.7.1. சிறப்புக் கவனம் தேவைப்படும் தேர்வர்கள் தேர்வு எழுதுவதற்கு வழங்கப்படும் சலுகைகள்(CwSN)*

பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைத் தேர்வுகள் எழுதும் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சலுகைகளாவன:

- தரை தளத்தில் இருக்கை வசதி.
- ஏதேனும் ஒரு மொழிப் பாட விலக்கு.
- பார்வைத்திறன் சவாலுடைய தேர்வர்களுக்கு தேர்வெழுத தனி அறை வசதி செய்யப்படுகிறது.
- சொல்வதை எழுதுபவர் நியமனம் (சொல்வதை எழுதுபவராக தகுதியான மற்றும் சம்பந்தப்பட்ட பாடத்தில் தகுதி பெற்ற இளங்கலை பட்டதாரி / முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள்).



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

- கூடுதல் ஒரு மணி நேரம்.
- இடைநிலை வகுப்பு (10ஆம் வகுப்பு) பயில்வோருக்கு செய்முறைத்தேர்வு விலக்களிப்பு.
- மேல்நிலை வகுப்புகள் (11ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு) பயில்வோருக்கு செய்முறைத் தேர்வின் போது ஆய்வக உதவியாளர் நியமனம்.
- தேர்வர்களது விருப்பத்தின் அடிப்படையில், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பாடங்களில் மட்டும், செய்முறைத் தேர்வுக்குப் பதிலாக செய்முறை தொடர்பான கொள்குறி வினாக்கள் (Multiple Choice Questions) அடங்கிய வினாத்தாட்கள் வழங்குதல்.

www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

### *5.7.2. தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்தல்*

தமிழ் வழியில் பயிலும் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைத் தேர்வுகள் எழுதும் பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் தேர்வுக்கட்டணம் செலுத்து வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. 2023–24ஆம் கல்வியாண்டில் கீழ்க்குறிப்பிட்டுள்ள தேர்வர்களுக்கு தேர்வுக்கட்டணம் செலுத்து வதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வகுப்பு | தேர்வு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட தேர்வர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இடைநிலை | 4,29,213 |
| 2. | மேல்நிலை முதலாம் ஆண்டு | 3,89,585 |
| 3. | மேல்நிலை இரண்டாம் ஆண்டு | 3,72,766 |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## 5.8. பொது மக்கள் நலன்

### *5.8.1. மின் ஆவணக் காப்பகம்*

மின் ஆவணக்காப்பகம், சான்றிதழ்களை மின்னணுச் சான்றிதழ்களாக பதிவிறக்கம் செய்து கொள்ள உதவுகிறது. இடைநிலை மற்றும் மேல்நிலைத் தேர்வுகளை எழுதிய மாணவர்கள் தங்களது ஆதார் எண்ணைக் கொண்டு மின் ஆவணக் காப்பகத்தின் உள்நுழைந்து அவர்களது மின்னணு மதிப்பெண் சான்றிதழினை அரசுத்தேர்வுகள் இயக்கக மதிப்பெண் விவரத் தொகுப்பிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 2016 முதல் 2023 ஆண்டு வரையிலான 1,40,13,845 தேர்வர்களது மதிப்பெண் விவரங்கள் மின் ஆவணக் காப்பகத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

### *5.8.2. இ-சனத்(E-SANAD) வழி மதிப்பெண் சான்றிதழ்களில் மின்னணு சான்றளிப்பு:*

உயர்கல்வி அல்லது வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்ல விரும்பும் மாணவர்களின் நலனுக்காக மாணவர்களது மதிப்பெண் சான்றிதழ்கள்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

இ–சனத் வலைதளம் மூலமாக மின்னனு சான்றிட்ட சான்றிதழ்களாக இந்நாள் வரை 1,920 சான்றிதழ்கள் அளிக்கப்பட்டுள்ளன.

### *5.8.3. அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள்*

மாநிலம் முழுவதும், தெரிந்தெடுக்கப்பட்ட 252 பள்ளி வளாகங்களில் அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் செயல்படுகின்றன. இவ்வியக்ககத்தால் நடத்தப்படும் அனைத்து தேர்வுகளுக்கும் தனித்தேர்வர்கள் இணைய வழியில் எளிதாக விண்ணப்பிக்க இச்சேவை மையங்களில் வசதி செய்யப்பட்டுள்ளது.

### *5.8.4. அரசு இ– சேவை மையங்கள் வழியே வழங்கப்படும் சேவைகள்*

கீழ்க்குறிப்பிட்டுள்ள சேவைகளை அருகில் உள்ள அரசு இ–சேவை மையங்களின் வழியே அரசுத் தேர்வுகள் இயக்ககம் வழங்குகிறது.

- இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ்
- சான்றிட்ட மதிப்பெண் நகல்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

- புலப்பெயர்ச்சி சான்றிதழ் (வெளிமாநிலம் அல்லது வெளிநாடுகளில் உயர்கல்வி பயில்வதற்கு)
- தமிழ் வழியில் பயின்றமைக்கான சான்று

### *5.8.5. மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டு சான்றிதழ்கள் இழந்தவர்களுக்கு இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்குதல்*

மிக்ஜாம் புயலால் மதிப்பெண் சான்றிதழ்களை இழந்த 6127 பொதுமக்களுக்கு இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ்கள் கட்டணமின்றி உடனடியாக வழங்கப்பட்டது.

## 5.9. இணையதள சேவைகள்

மாணவர் சமூகம், பெற்றோர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்குத் தேவைப்படும் கீழ்குறிப்பிட்டுள்ள விவரங்களை எளிதாக பெறுவதற்காக www.dge.tn.gov.in என்ற வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

- தேர்வு அறிவிப்புகள்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

- தேர்வுக்கால அட்டவணைகள்
- விண்ணப்பப் படிவங்கள்
- தேர்வுக் கட்டண விவரங்கள்
- தேர்வர்களுக்கான அறிவுரைகள்
- முந்தைய ஆண்டு தேர்வுகளின் வினாத்தாட்கள்/மாதிரி வினாத்தாட்கள்
- இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள்
- சான்றிட்ட மதிப்பெண் நகல் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள்
- புலப்பெயர்ச்சி சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள்
- பள்ளி மாணவர்கள் மற்றும் தனித்தேர்வர்களுக்கான பெயர் பட்டியல் தயாரித்தல்.
- தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு பதிவிறக்கம் செய்யும் வசதி



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

- தேர்வுக்கட்டணத்தை இணையதளம் மூலம் செலுத்துதல்
- மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை அறிதல்
- அரசுத் தேர்வுகள் சேவை மைய விவரங்கள்

## 5.10. சிறைச்சாலைகளில் தேர்வு மையங்கள் அமைத்தல்

மாநிலப் பொதுத் தேர்வுகள் சிறைவாசிகளின் கல்வித் தேடலை ஊக்குவிப்பதற்காகவும் அவர்களின் சீர்திருத்த காலத்திற்குப் பிறகு வாழ்வாதாரத்திற்கு உதவுவதற்காகவும் சிறைச்சாலை வளாகத்திலேயே தேர்வுகள் நடத்தப்படுகின்றன. 2023-24 கல்வியாண்டில், 572 எண்ணிக்கையிலான சிறைவாசிகள் 10, 11 மற்றும் 12 வகுப்பு பொதுத் தேர்வுகளுக்கு தேர்வெழுத விண்ணப்பித்ததன் அடிப்படையில் 2023-24ஆம் ஆண்டு பொது தேர்வுகள் நடத்தப்பட்டு தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

### 5.11. துணைத் தேர்வுகள் நடத்துதல்

ஒவ்வொரு ஆண்டும் 10, 11 மற்றும் 12 வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டவுடன் தேர்ச்சி பெறத் தவறிய மாணக்கர்களுக்கு அதே கல்வியாண்டில் தங்களது உயர் படிப்பைத் தொடர்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் குறுகிய கால இடைவெளியில் துணைத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

அரசு மற்றும் முழுமையாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயின்று இடைநிலை, மேல்நிலை முதல்/இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகளில் தோல்வியுற்று, ஜீன்/ஜீலை துணைத் தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் நலன் கருதி இடைநிற்றலை, தவிர்க்கும் பொருட்டு, அம்மாணவர்களிடமிருந்து பெறப்படும் தக்கல் வழியான விண்ணப்பங்களுக்குரிய கட்டணம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

### 5.12. தேர்வு முடிவுகள் வெளியிடுதல்

தேர்வர்களின் பெயர் பட்டியல் தயாரிக்கும் பொழுது பதியப்பட்ட அலைபேசி எண்ணிற்கு தேர்வு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

முடிவுகள் குறுஞ்செய்தியாக உடனடியாக அனுப்பி வைக்கப்படுகிறது. தேர்வு முடிவுகள் இணைய வழி வாயிலாக வெளியிடுவதற்கு www.dge.tn.gov.in, https://tnresults.nic.in ஆகிய இரண்டு வலைதளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) சம்பந்தப்பட்ட பள்ளிகள் இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இடைநிலை (10), மேல்நிலை (+1 மற்றும் +2) மற்றும் தொடக்கக் கல்விப்பட்டயத் தேர்வு ஆகிய பொதுத் தேர்வுக்குரிய விடைத்தாட்களின் நகல்கள் பெறுவதற்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேர்வர்களின் விண்ணப்பத்தின் அடிப்படையில் விடைத்தாட்களின் நகல்கள் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இதன் மூலம் மாணவர்கள் அவர்களது விடைத்தாட்களின் மறுகூட்டல் / மறு மதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கலாம்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## 5.13. சான்றிதழ்கள் வழங்குதல்

### *5.13.1. தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் / மதிப்பெண் பட்டியல்*

தேர்வு முடிவுகள் வெளிவந்த மறுநாள் முதல், இடைநிலைத் தேர்வெழுதிய தேர்வர்கள் அவர்களின் தற்காலிக மதிப்பெண் சான்றிதழையும், மேல்நிலைத் தேர்வெழுதியோர் மதிப்பெண் பட்டியலையும் www.dge.tn.gov.in வலைதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

### *5.13.2. இடைநிலை /மேல்நிலை தேர்வுகளுக்கான பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய மதிப்பெண் சான்றிதழ்கள்*

மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளில் முழுமையாக தேர்ச்சி அடைந்தவர்களுக்கு பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய மதிப்பெண் சான்றிதழ்கள் தனித்தனியே வழங்கப்படுகிறது. அத்துடன் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு மதிப்பெண் பட்டியல் வழங்கப்படுகிறது. இடைநிலை / மேல்நிலைத் தேர்வுகளை ஒன்றுக்கு மேற்பட்ட தேர்வெழுதி



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு ஒருங்கிணைந்த மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

### *5.13.3. மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ் மற்றும் மதிப்பெண் சான்றிதழின் சான்றிட்ட மதிப்பெண் நகல்*

தேர்வர்களின் விண்ணப்பத்தின் அடிப்படையில் 2023-24ஆம் ஆண்டு 16,113 இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ்களும் மற்றும் 2,715 சான்றிட்ட மதிப்பெண் நகல்களும் வழங்கப்பட்டுள்ளன.

### *5.13.4. புலப்பெயர்ச்சி சான்றிதழ்*

10 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வுகளில் தேர்ச்சி பெற்று பிற மாநிலங்களில் மேற்படிப்பைத் தொடர விரும்பும் தேர்வர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்ட 5 தினங்களுக்குள் புலப்பெயர்ச்சி சான்றிதழ் வழங்கப்படுகிறது. 2023-24-ஆம் ஆண்டு 7,656 புலப்பெயர்ச்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

### *5.13.5. மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத் தன்மையினை சரிபார்த்தல்*

மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை கோரி உயர்கல்வி நிறுவனங்கள், அரசு மற்றும் பொதுத்துறை நிறுவன நியமன அதிகாரிகளிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில், மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை அறியும் பணி மேற்கொள்ளப்படுகிறது. 2023–24–ஆம் ஆண்டில் 2,29,859 மதிப்பெண் சான்றிதழ்களுக்கு உண்மைத்தன்மை சரிபார்த்து வழங்கப்பட்டுள்ளது.

### 5.14. நிதி ஒதுக்கீடு

அரசால் இவ்வியக்ககத்திற்கு 2024–25–ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ரூ. 131.45 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# 6. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

## 6.1. முன்னுரை

கல்வியானது மானுட வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை உருவாக்கும் சக்திவாய்ந்த கருவியாக உள்ளது. ஒருவருடைய அறிவையும், ஆற்றலையும் உயர்த்தி சமூகத்தில் நன்மதிப்பை உருவாக்கும் தூண்டுகோலாகவும் கல்வி விளங்குகின்றது. கல்வியை குழந்தைப் பருவம் முதல் கற்க ஆரம்பித்து, வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து பயில பல்வேறு வாய்ப்புகள் உள்ளன. அவ்வகையில், இளம் வயதில் கற்கும் வாய்பை இழந்த வயது வந்தோருக்கு மீண்டும் கற்கும் வாய்ப்பை வழங்கும் சிறந்த தளமாக வயது வந்தோர் கல்வி விளங்குகிறது. தமிழ்நாடு அரசு, எழுதப்படிக்கத் தெரியாதோருக்கான கல்விசார் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், 1976ஆம் ஆண்டு முதல் பல்வேறு வயது வந்தோர் கல்வித் திட்டங்களைப் பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின் வாயிலாகத் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## 6.2. தொலைநோக்கு

அடிப்படை எழுத்தறிவுக் கல்வி, தொழிற்திறன் கல்வி மற்றும் வாழ்நாள் முழுதும் கல்வி கற்கும் வாய்ப்பை வழங்குவதன் மூலம் முழு எழுத்தறிவை அடைதல்.

## 6.3. குறிக்கோள்கள்

எழுத்தறிவு பெறாத வயது வந்த அனைவருக்கும் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுக் கல்வி அளித்தல்.

புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் அடிப்படைக் கல்விக்கு மேல் கற்றலைத் தொடரவும், பள்ளிகளில் அளிக்கப்படும் முறையான கல்விக்கு இணையான கல்வி பெறவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல்.

தொழில் சார்ந்த பயிற் அளிப்பதன் மூலம் அவர்களின் வருவாய் ஈட்டும் திறன் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படச் செய்தல்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## 6.4. சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்

எழுதப்படிக்கத் தெரியாத சிறைவாசிகளுக்கு அடிப்படை எழுத்தறிவுக் கல்வி வழங்கிடுவதே இச்சிறப்புத் திட்டத்தின் நோக்கமாகும். 2023–24 ஆம் ஆண்டில், திருவள்ளூர், கடலூர், வேலூர், சேலம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் 9 மத்திய மற்றும் மாவட்ட சிறை வளாகங்களில் சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் சிறைத் துறை ஒருங்கிணைப்புடன் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டது. இவர்கள் அனைவருக்கும் எழுத்தறிவுச் சான்றிதழ் இவ்வியக்ககத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

சிறைவாரியான பயனாளிகளின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது:

| வ. எண். | மாவட்டம் | சிறைவாசிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் |
| 1 | திருவள்ளூர் | 284 | 42 | 326 |
| 2 | கோயம்புத்தூர் | 94 | 34 | 128 |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | மதுரை | 77 | 30 | 107 |
| 4 | கடலூர் | 39 | 0 | 39 |
| 5 | சேலம் | 178 | 43 | 221 |
| 6 | திருநெல்வேலி | 66 | 0 | 66 |
| 7 | திருச்சி | 62 | 61 | 123 |
| 8 | வேலூர் | 157 | 21 | 178 |
| 9 | புதுக்கோட்டை | 61 | 0 | 61 |
| மொத்தம் | | 1018 | 231 | 1249 |

**ஆதாரம்: பமவகஇ மற்றும் சிறைத்துறை**

## 6.5. புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2022–27

2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2022–27, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் 60:40 என்கிற நிதிப்பங்களிப்பின் கீழ் மாநிலத்தின் 38 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 15 வயதுக்குமேற்பட்ட எழுதப்படிக்கத் தெரியாத அனைவருக்கும் அடிப்படை எழுத்தறிவுக் கல்வி வழங்கிடுவதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

2023–24ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும், 26,408 கற்போர் எழுத்தறிவு மையங்கள் அமைக்கப்பட்டு, அம்மையங்களின்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

வாயிலாக 4,80,740 கற்போர்கள் தங்களின் அடிப்படை எழுத்தறிவுக் கல்வி பெற்றுப் பயனடைந்துள்ளனர். 26,408 தன்னார்வலர்களின் தன்னலமற்ற கல்விச் சேவைகளின் உதவியுடன் கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 2023-24ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.8.29 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இதில், ரூ.6.22 கோடி தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையத்திற்கு விடுவிக்கப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்-பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில், 10 இலட்சம் நபர்கள் புதிய பாரத எழுத்தறிவு திட்டத்தின் கீழ் அடிப்படை எழுத்தறிவுக் கல்வி பெற்று பயடைந்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் அடிப்படை எழுத்தறிவுச் சான்றிதழ்கள் இவ்வியக்ககத்தினால் வழங்கப்பட்டுள்ளன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## 6.6. நிலையான வளர்ச்சிக் குறிக்கோளின் கீழ் இலக்கை அடைதல்

தமிழ்நாட்டில், அனைத்து கிராம மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் விரிவான கணக்கெடுப்பின் வாயிலாக எழுதப்படிக்கத் தெரியாத அனைவரையும் கண்டறிந்து, அவர்கள் அனைவருக்கும் புதிய பாரத எழுத்தறிவுத் திட்டதின்கீழ் அடிப்படை எழுத்தறிவுக் கல்வி வழங்கி, அனைவரையும் கற்றோர்களாக்கி விடுவதற்கான உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம், நிலையான வளர்ச்சிக் குறிகோளின் இலக்கு எண் 4.6–இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, 2030ஆம் ஆண்டிற்குள் இளைஞர்கள், குறிப்பிடத்தக்க விகிதத்திலான வயது வந்தோர், ஆண்கள் மற்றும் பெண்கள், ஆகிய அனைவரும் எண்ணறிவு மற்றும் எழுத்தறிவுக் கல்வி பெறுவது உறுதி செய்யப்படும். இவ்விரிவான கணக்கெடுப்பின்கீழ் கண்டறியப்படும் எழுதப்படிக்கத் தெரியாதோரின் விவரங்கள் அனைத்தும் இத்திட்டத்தின்கீழ் தனித்துவமாக உருவாக்கப்பட்டுள்ள கைபேசி செயலியின் வாயிலாகப் பெறப்பட்டு வருகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

### 6.7. மாநில எழுத்தறிவு விருது

சிறந்த கற்போர் எழுத்தறிவு மையங்களுக்கு, கேடயம், பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பதக்கங்கள் உள்ளடக்கிய மாநில எழுத்தறிவு விருது வழங்கப்பட்டது. புதிய பாரத எழுத்தறிவுத் திட்டச் செயல்பாடுகளைச் சிறப்பாகச் செயல்படுத்திய தெரிவு செய்யப்பட்ட 114 கற்போர் மையங்களுக்கு இவ்விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

### 6.8. நிதி ஒதுக்கீடு

அரசால் இவ்வியக்ககத்திற்கு 2024–25ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.12.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# 7. பொது நூலக இயக்ககம்

## 7.1. அறிமுகம்

அரிய தகவல்களை அறிந்து கொள்ளவும், புதிய செய்திகளைக் கற்றுக்கொள்ளவும், புத்தகங்களின் மூலம் அறிவை விரிவாக்கவும் அனைவரும் செல்லக்கூடிய இடம் நூலகங்கள், தமிழ்நாட்டில் உள்ள பொது நூலகங்கள் கற்றலுக்குத் தகுந்த நுழைவு வாயிலாக உள்ளன. இவற்றை நிர்வகிக்கும் பொது நூலக இயக்ககம் சிறந்த வாசிப்புச் சூழலை ஊக்குவித்து, முன்மாதிரியான நூலகச் சேவைகளை வழங்குவதில் நாட்டிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக நிலைநிறுத்தியுள்ளது.

## 7.2. இலக்கு

எல்லையற்ற கல்வி வளர்ச்சியை உருவாக்குதல் மற்றும் சமூகத்தில் தனிப்பட்ட, சமூக, பொருளாதார, இலக்கிய மற்றும் அறிவுசார் வளர்ச்சியை ஊக்குவித்தல்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

7.3. குறிக்கோள்கள்

- தொழில் நுட்பத்துடன் கூடிய பொது நூலகங்கள் மூலம் அனைத்துத் தரப்பு மக்களின் அறிவுசார் தகவல் தேவைகளை நிறைவு செய்தல்.
- பழைய மற்றும் அரிய நூல்களை மின்னுருவாக்கம் செய்து பாதுகாத்தல்.
- பதிப்பிக்கப்படும் தரமான, புதிய நூல்கள் உடனுக்குடன் பொது நூலகங்களில் இருப்பு வைத்தலை உறுதி செய்தல்.
- மாற்றுத்திறனாளர்களும் பயன்பெறும் வகையில் ஒலி நூல்கள், மின்நூல்கள் மற்றும் பிரெய்லி நூல்கள் பொது நூலகங்களில் இருப்பதை உறுதி செய்தல்.
- அனைத்துப் பொது நூலகங்களிலும் உள்கட்டமைப்பு வசதிகளைச் சிறப்பாக்குதல்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## 7.4. தமிழகத்தில் பொது நூலகங்கள்

கன்னிமாரா பொது நூலகம் (மாநில மைய நூலகம்), அண்ணா நூற்றாண்டு நூலகம், கலைஞர் நூற்றாண்டு நூலகம், 35 மாவட்ட மைய நூலகங்கள், 1,926 கிளை நூலகங்கள், 1,915 ஊர்ப்புற நூலகங்கள், 14 நடமாடும் நூலகங்கள், 781 பகுதிநேர நூலகங்கள் என மொத்தம் 4,674 நூலகங்களின் வாயிலாக மக்களுக்குச் சிறந்த சேவைகள் வழங்கப்படுகின்றன. இவை தவிர அரசு மானியம் பெற்று தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம், டாக்டர் உ.வே.சா. நூலகம் மற்றும் மறைமலையடிகள் நூலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

### *7.4.1. கன்னிமாரா பொது நூலகம்*

தமிழ்நாட்டின் மாநில – மைய நூலகமான கன்னிமாரா பொது நூலகம் 1896–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தியாவின் நான்கு தேசிய வைப்பு நூலகங்களில் ஒன்றான இது, நூல்கள் (செய்தித்தாள்கள் மற்றும் பருவ இதழ்கள்) அனுப்புகைச் சட்டம் 1954–இன்படி இந்தியாவில்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

வெளியாகும் அனைத்து நூல்கள், செய்தித்தாள்கள் மற்றும் பருவ இதழ்களின் ஒரு பிரதியை இலவசமாகப் பெற்று வருகிறது. நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் மற்றும் காப்புரிமைச் சட்டத்திற்கு உட்படாத நூல்கள் பொது மக்களின் பயன்பாட்டிற்காக மின்னுருவாக்கம் செய்து பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்நூலகத்தில் இலக்கியம், வரலாறு மற்றும் அறிவியல் சார்ந்த 9,44,794 புத்தகங்கள் உள்ளன. இதன் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,49,144 ஆகும். இந்நூலகத்தைப் பற்றிய அனைத்துத் தகவல்களையும் www.connemarapubliclibrarychennai.com எனும் இணைய தளத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். இந்நூலகம் 2021-இல் தனது 125-வது ஆண்டினை நிறைவுசெய்துள்ளது. இதனைத் தொடர்ந்து, இந்நூலகத்தின் பழைய நூலகக் கட்டடம் ரூ.1.50 கோடி மதிப்பில் புதுப்பிக்கப்பட்டுள்ளதோடு, ரூ.3.19 கோடி செலவில் மின் கட்டமைப்புகள் பொதுப்பணித் துறையின் மூலம் சீர்செய்யப்பட்டு நவீனமயமாக்கப்பட்டுள்ளது. 2023-24ஆம் ஆண்டில்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

1,95,413 வாசகர்கள் இந்நூலகத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

### *7.4.2. அண்ணா நூற்றாண்டு நூலகம்*

தெற்கு ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய நூலகமான அண்ணா நூற்றாண்டு நூலகம் சென்னை கோட்டூர்புரத்தில் 3.75 இலட்சம் சதுர அடி பரப்பளவில் 9 தளங்களுடன் ரூ.197.43 கோடி செலவில் கட்டப்பட்ட இந்நூலகம் 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் மேனாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் டாக்டர் மு.கருணாநிதி அவர்களால் பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டது. இந்நூலகத்தில் பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கிய 6,75,067 நூல்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூலகத்தில் 5,548 உறுப்பினர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளதோடு, 2023–24ஆம் ஆண்டில் 4,45,363 வாசகர்கள் பயனடைந்துள்ளனர்.

போட்டித் தேர்வுப் பிரிவு, குழந்தைகள் பிரிவு, பருவ இதழ் பிரிவு, தமிழ், ஆங்கிலம் மற்றும் மண்டல மொழிப் புத்தகப் பிரிவு, மின்நூல் பிரிவு மற்றும் அரசினர் கீழ்திசைச் சுவடிகள் நூலகம் ஆகிய



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

பல்வேறு பிரிவுகளுடன் பார்வை மாற்றுத் திறனாளர்களுக்கான தனிப்பிரிவு மற்றும் சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு ஆகிய தனிப் பிரிவுகளும் இங்குள்ளன.

இந்நூலகத்தில் ஒருங்கிணைந்த நூலக மென்பொருள் பயன்படுத்தப்பட்டு அதன் மூலம் வாசகர்களுக்கு உயர்சேவை வழங்கப்பட்டு வருகிறது. இந்நூலகத்திலுள்ள நூல்களைப் பற்றிய விவரங்களை தெரிந்து கொள்ள இணையவழி நூற்பட்டி (WEB–OPAC) ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு, ரேடியோ அலைவரிசைக் குறியீடு (Radio Frequency Identification – RFID) என்ற நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நூலக சேவை வழங்கப்பட்டு வருகிறது.

இந்நூலகத்திலுள்ள மாநாட்டுக் கூடம், கருத்தரங்குக் கூடம், கலையரங்கம் முதலியவற்றில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட வாடகை வீதத்தில் அரசு விழாக்கள், கலை மற்றும் பண்பாடு சார்ந்த நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் அரசால் அனுமதிக்கப்படும் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. வாரந்தோறும் சனிக்கிழமைகளில் பல்வேறு துறை



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

சார்ந்த ஆளுமைகள் பங்கு பெறும் "பொன்மாலைப் பொழுது" நிகழ்ச்சி, போட்டித்தேர்வு மாணவர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகள், வாரந்தோறும் குழந்தைகளுக்கான சிறப்பு நிகழ்ச்சிகள் என சமூகத்தின் பலதரப்பட்ட வாசகர்களுக்குப் பல்வேறு வகையான நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நூலகத்தின் கட்டடம் மற்றும் மின்சாரம் சார்ந்த பழுதுகள் ரூ.37.82 கோடி செலவில் சரிசெய்யப்பட்டு புதுப்பொலிவுடன் புனரமைக்கப்பட்டது. இந்நூலகத்திலுள்ள புத்தகங்களின் பரந்த தொகுப்பினைப் புதுப்பித்து விரிவுபடுத்தும் நோக்கில், ரூ.6.50 கோடி மதிப்பில் இந்நூலகத்திற்கு மின்–புத்தகங்கள், மின்–பத்திரிகைகள் மற்றும் மின் ஆராய்ச்சி இதழ்கள் கொள்முதல் செய்யும்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### *7.4.3. கலைஞர் நூற்றாண்டு நூலகம்*

தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் டாக்டர் மு.கருணாநிதி அவர்களின் 100வது பிறந்தநாள் விழாவையொட்டி, தன் வாழ்நாள் முழுவதும்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

புத்தகங்கள் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த அன்னாரின் நினைவாக ரூ.218.19 கோடி செலவில் மதுரையில் அடித்தளம், தரைத்தளம் மற்றும் ஆறு கூடுதல் தளங்களுடன் முழுமையாக குளிரூட்டப்பட்ட கட்டடமாக கலைஞர் நூற்றாண்டு நூலகம் அமைக்கப்பட்டு, 15.07.2023 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டது.

கலைஞர் நூற்றாண்டு நூலகம் தென் தமிழ்நாட்டின் அறிவார்ந்த கலங்கரை விளக்கமாக விளங்குவதோடு, கற்றல் மையமாகவும், கலை, கலாச்சாரம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் பரந்த அளவிலான தகவல் வளங்களை உள்ளடக்கியதாகவும் செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்தில் பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கிய 3,62,393 நூல்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூலகம் திறக்கப்பட்டு 11 மாதங்களில் சுமார் 8,86,725 வாசகர்கள் பயன்படுத்தியுள்ளனர். அதாவது நாள் ஒன்றிற்கு, சராசரியாக 2,700 நபர்கள் நூலகத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

முன்னணி தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் வெளியாகும் தினசரி ஆங்கில செய்தித்தாள்களில் உள்ள தலையங்கங்கள் பகுதி தமிழில் மொழிப்பெயர்ப்பு செய்யப்பட்டு பல்வேறு போட்டித் தேர்விற்குத் தயாராகும் மாணவர்களுக்கு தினமும் இந்நூலகத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இந்நூலகத்தில் 2,035 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளதோடு, நூலக உறுப்பினர்களுக்கு WiFi வசதி வழங்கப்படுகிறது. குழந்தைகளுக்கான தொடர் நிகழ்ச்சிகள், சிறுவர்களின் வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்கும் வண்ணம் "நூல் அரும்புகள்" நிகழ்ச்சி, போட்டித்தேர்வு மாணவர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகள், இலக்கிய ஆர்வலர்களுக்காக மாதந்தோறும் "நிலவொளியில்" நிகழ்ச்சி, மற்றும் சனிக்கிழமைகளில் குழந்தைகளுக்கான சிறப்பு திரைப்படம் திரையிடல் மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.

### *7.4.4. மாவட்ட மைய நூலகங்கள்*

தமிழ்நாடு பொது நூலக விதிகள் 1950இன் கீழ் மாவட்ட மைய நூலகங்கள் நிறுவப்பட்டன. இவை



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும் வாசகர்களுக்குத் தரமான தகவல்களை வழங்குவதோடு குறிப்பாக பள்ளி/கல்லூரி மாணவர்கள் மற்றும் வேலை தேடும் இளைஞர்களுக்காகப் பல்வேறு சேவைகளையும் வழங்கி வருகிறது. இந்நூலகங்களில் பல்வேறு துறைசார்ந்த 70 இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. இந்நூலகங்களில், பருவ இதழ்கள் பிரிவு, குறிப்புதவி நூல்கள் பிரிவு, குடிமைப்பணித் தேர்வுகள் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் தமிழ் & ஆங்கிலத்தில் நாளிதழ்கள், பருவ இதழ்கள், மற்றும் அனைத்துப் பாடங்களிலும் போட்டித்தேர்வு நூல்கள் மற்றும் இணைதள வசதிகள் இடம் பெற்றுள்ளன. மாவட்ட மைய நூலகங்களில் 13,50,813 உறுப்பினர்கள் உள்ளதோடு, 24,28,614 வாசகர்கள் இந்த நூலகங்களால் பயனடைந்துள்ளனர்.

### *7.4.5. கிளை நூலகங்கள்*

மக்கள் தொகை அதிகமாக உள்ள பகுதிகளுக்கு நூலகச் சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில், 5,000 முதல் 50,000 வரை மக்கள் தொகை கொண்ட நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் கிளை



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது மாநிலம் முழுவதும் 314 முழுநேர கிளை நூலகங்கள் உட்பட 1,926 கிளை நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நூலகங்களில் குழந்தைகள், மாணவர்கள், பெண்கள், உழைக்கும் மக்கள் மற்றும் மூத்த குடிமக்கள் நலனுக்காகப் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இந்த நூலகங்களில் மொத்தம் 6,08,71,560 புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்நூலகங்களில் 65,06,343 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளதோடு, 2023–2024 ஆம் நிதியாண்டில் இந்நூலகங்களால் 2.66 கோடி வாசகர்கள் பயனடைந்துள்ளனர்.

### *7.4.6. ஊர்ப்புற நூலகங்கள்*

ஊர்ப்புற நூலகங்கள் 1996ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. இந்நூலகங்கள் சமூக, கலாச்சார மற்றும் அறிவுசார் தொடர்புகளுக்கான சந்திப்பு இடமாக விளங்குகின்றன. புதிய தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஊர்ப்புற நூலகங்கள் கணினி வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2023–24ஆம் ஆண்டில், 1.54 கோடி வாசகர்கள் பயனடைந்ததோடு,



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

22,45,401 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த நூலகங்களில் 2,30,26,977 புத்தகங்கள் இடம்பெற்றுள்ளன.

### *7.4.7. நடமாடும் நூலகங்கள்*

மலைப்பாங்கான, தொலைதூர மற்றும் அணுக முடியாத பகுதிகளில் வசிக்கும் ஏழை மக்களின் நூலகத் தேவைகளை நிறைவேற்றவும், இந்தப் பகுதிகளைச் சேர்ந்த பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காகவும், மாநிலத்தின் 14 மாவட்டங்களில் நடமாடும் நூலகங்கள் செயல்படுகின்றன. நூல்கள், குறுந்தகடுகள், ஒளிப்படங்கள், வரைபடங்கள் மற்றும் பருவ இதழ்களுடன் நடமாடும் நூலகங்கள் சேவையாற்றி வருகின்றன. இந்த நடமாடும் நூலகங்களால் 35,492 உறுப்பினர்களும், 41,450 வாசகர்களும் பயனடைந்துள்ளனர்.

### *7.4.8. பகுதி நேர நூலகங்கள்*

பொது நூலகச் சேவையானது அடித்தட்டு மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

உருவாக்கப்பட்டவை பகுதிநேர நூலகங்கள் ஆகும். இந்த நூலகங்கள் வாயிலாக 3,43,175 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, 25,70,767 வாசகர்கள் பயனடைந்துள்ளனர். 2023–24ஆம் ஆண்டில் புதிதாக 10 பகுதிநேர நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

## 7.5. நிதி ஆதாரம்

### *7.5.1. நூலக வரி*

பொது நூலகத் துறையின் முக்கிய வருவாய் நூலக வரியே ஆகும். தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948, பிரிவு 12(1)(a)–இன்படி, உள்ளாட்சி நிறுவனங்கள் வசூலிக்கும் சொத்து வரியில் ஒரு ரூபாய்க்கு 10 பைசா வீதம் நூலக வரி வசூலிக்கப்படுகிறது. நூலகங்களுக்குத் தேவையான நூல்கள், பருவ இதழ்கள் மற்றும் நாளிதழ்கள் வாங்குதல், எழுது பொருட்கள், நுகர்பொருட்கள் மற்றும் தளவாடங்கள் வாங்குதல், புதிய கட்டடங்கள் கட்டுதல், பழுதடைந்த நூலகக் கட்டடங்களைப் புதுப்பித்தல், பகுதிநேரத் துப்புரவாளர் ஊதியம், பகுநேர நூலகர் தொகுப்பூதியம், தினக்கூலி ஊதியம் மற்றும்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

நூலக மேம்பாட்டுப் பணிகள் அனைத்தும் நேரடியாக நூலக வரித் தொகையிலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### *7.5.2. நூலக வரி முன் பணம்*

ஆறாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைப்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெறப்படும் பொது நூலகங்களுக்கான நூலக வரியினை, உள்ளாட்சி நிதிப் பகிர்விலிருந்து முன்பணமாகப் பொது நூலக இயக்ககத்திற்கு வழங்கவும், உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் நிலையில் வசூலிக்கப்படும் உள்ளபடியான நூலக வரியைத் தக்க வைத்துக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, உள்ளாட்சி அமைப்புகளால் 2022–23 மற்றும் 2023–24 ஆம் ஆண்டுகளுக்கான நூலகவரி முன்பணத் தொகை முறையே ரூ.178.00 கோடி மற்றும் ரூ.195.80 கோடி பொது நூலக இயக்ககத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

### *7.5.3. ஒற்றை முனைக் கணக்கு*

நூலக வரி முன்பணத்தினை பொது நூலகச் செயல்பாடுகளுக்கும், வளர்ச்சிப் பணிகளுக்கும் வங்கி மென்பொருள் (Banking Software) மூலம் பொது நூலகங்களுக்கான வரவு–செலவுகளை மிக எளிமையாகவும், விரைவாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் கையாளும் வகையில் ஒற்றை முனைக் கணக்கு முறை வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பொது நூலக இயக்ககம் உட்பட அனைத்து சார்நிலை அலுவலகங்களில் பணியாற்றும் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஒற்றை முனைக் கணக்கு வழியாகக் கண்காணிப்பதற்குரிய வரவு–செலவுத் திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் 2024 ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## 7.6. இராஜா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை மானியம்

இந்தியாவில் பொது நூலகச் சேவையினை ஒருங்கிணைத்தல், கண்காணித்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றினை ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டு வரும் ஒன்றிய அரசின் நிறுவனமான இராஜா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை பொது நூலகம் மற்றும் தனியார் நூலகங்களுக்குத் தொடர்ந்து ஆதரவு அளித்து, பொது நூலகச் சேவைகளை மேம்படுத்துவதற்கு உதவி வருகிறது. மேற்படி அறக்கட்டளைக்கு இணையாக மாநில அரசும் பங்குத் தொகை செலுத்தி வருகிறது. 2023-24 ஆம் நிதியாண்டில் ரூ.400 இலட்சம் இணை மானியமாகப் பெறப்பட்டுள்ளது. இத்தொகையின் மூலம் மாவட்ட மைய நூலகங்களில் மொத்தம் 32 மெய்நிகர் கருவிகள், 32 Interactive Intelligent Panels, மாவட்ட மைய நூலகம் மற்றும் முழுநேரக் கிளை நூலகங்களில் மொத்தம் 337 கண்காணிப்புக் கேமரா தொகுப்புகள் நிறுவப்பட்டுள்ளன. 668 நூலகங்களுக்கு 1686 இரும்பு நூலடுக்குகள் வழங்கப்பட்டுள்ளன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

7.7. நூலகக் கட்டமைப்பு

தமிழ் நாட்டில் செயல்பட்டுவரும் 4,671 பொது நூலகங்களில் 1,729 நூலகங்கள் சொந்தக் கட்டடத்திலும், 2,632 நூலகங்கள் வாடகையில்லா இலவசக் கட்டடத்திலும், 296 நூலகங்கள் தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டடத்திலும் இயங்கி வருகின்றன.

7.8. குடிமைப்பணி கல்வி மையம்

வேலை தேடும் பெருவாரியான இளைஞர் சமூகத்தின் நலன் கருதி, கன்னிமாரா பொது நூலகம், மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் மாவட்டத் தலைமையகத்தில் அமைந்துள்ள நூலகங்கள், நகராட்சிகள் மற்றும் சிறு நகரங்களில் செயல்படும் 290 நூலகங்களில் குடிமைப்பணி கல்வி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு ஆர்வமுள்ள இளைஞர்களின் பயன்பாட்டிற்காக இங்கு போட்டித் தேர்வுகள் தொடர்பான புத்தகங்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள் ஆகியவை வாங்கி வழங்கப்படுகின்றன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

7.9. வாசகர் வட்டம்

நூலகச் செயல்பாடுகளில் மக்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு நூலகத்திலும் கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், நூலக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர்வாசிகளைக் கொண்ட வாசகர் வட்டம் அமைக்கப்பட்டுள்ளது. வாசகர் வட்டங்கள் புதிய எழுத்தாளர்கள் மற்றும் புத்தகங்களை அடையாளம் காட்டுவதோடு, வாசகர்களைப் புத்தகங்களுடன் இணைப்பதன் வாயிலாகப் பயனாளர்களிடையே நல்லுறவை வளர்க்கிறது.

7.10. நூலகப் புரவலர்கள் மற்றும் நன்கொடையாளர்கள்

இத்திட்டத்தின்படி நுலகங்களுக்கு முறையே ரூ.1,000, ரூ.5,000 மற்றும் ரூ.10,000 நன்கொடையாக அளிக்கும் வாசகர்கள் புரவலர்கள், பெரும் புரவலர்கள் மற்றும் நன்கொடையாளர்களாக சேர்க்கப் படுகின்றனர். இவ்வாறு பெறப்படும் தொகை வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டியானது பொதுநூலகங்களின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படுகிறது. அனைத்து



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

நூலகங்களிலும் இதுவரை மொத்தம் 1,52,581 புரவலர்கள், 2,025 பெரும் புரவலர்கள், 702 நன்கொடையாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### 7.11. சாதனைகள்

#### *7.11.1. மெய்நிகர் நூலகம் (Virtual Reality Library)*

ஆண்டுக்கு சுமார் ஒரு இலட்சம் மாணவர்கள் / குழந்தைகள் பயன்பெறும் வகையில், ரூ.57.20 இலட்சம் மதிப்பீட்டில் 38 மாவட்டங்களில் உள்ள 76 நூலகங்களில், ஒரு நூலகத்திற்கு நவீன தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய இரண்டு மெய்நிகர் கருவிகள் வீதம் 152 மெய்நிகர் தொழிற்நுட்பக் கருவிகளுடன் நிறுவப்பட்ட மெய்நிகர் தொழிற்நுட்ப நூலகம் (Virtual Reality Library) சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

#### *7.11.2. நூலக நண்பர்கள் திட்டம்*

தமிழகத்தில் உள்ள 2,288 நூலகங்களில் மொத்தம் 5,400 தன்னார்வலர்களைக் கொண்டு கிராமங்கள் மற்றும் நகரப் பகுதிகளில் நூலக சேவை கிடைக்கப் பெறாத இடங்களில் சுமார் 15 இலட்சம்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

வாசகர்கள் பயன்பெறும் வகையில் ரூ.56.25 இலட்சம் மதிப்பீட்டில் நூலக நண்பர்கள் என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### *7.11.3. பொது நூலகங்களுக்கான ஒருங்கிணைந்த நூற்பட்டியல் (Union Catalogue)*

கன்னிமாரா பொது நூலகம், அண்ணா நூற்றாண்டு நூலகம் மற்றும் 35 மாவட்ட மைய நூலகங்களிலுள்ள அனைத்து நூல்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. https://tamilnadupubliclibraries.org என்ற இணையதளத்தின் மூலம் பொது நூலகங்களில் உள்ள புத்தகங்களைத் தேடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு, 25 இலட்சம் நூல்களின் விவரங்கள் உள்ளடங்கிய ஒருங்கிணைந்த நூற்பட்டி (Union Catalogue) பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வெளியிடப்பட்டுள்ளது.

### *7.11.4. மின்னுருவாக்கம்*

கன்னிமாரா பொது நூலகம், தமிழ்நாடு தொல்லியல் துறை நூலகம், தமிழ்நாடு காப்பக



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

நூலகம், பல்கலைக்கழக நூலகங்கள், கல்லூரி நூலகங்கள் மற்றும் தனியார் நூலகங்களில் இதுவரை 29,000க்கும் மேற்பட்ட நூல்களும் (40 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்கங்கள்) 2,54,694 அரிய நூல்களின் கையெழுத்துப் பிரதிகளும் மின்னுருவாக்கம் செய்யப்பட்டு உள்ளடக்கங்கள் https://tamilnadupubliclibraries.org என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

### *7.11.5. முனைவர்.எஸ்.ஆர்.அரங்கநாதன் நினைவு நூலகம்*

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் உருவாக முக்கிய பங்காற்றிய இந்திய நூலகத் தந்தை பத்மஸ்ரீ முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் அவர்களை நினைவு கூறும் வகையில், அவர் பிறந்த இடமான மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள சீர்காழியில் முனைவர். எஸ்.ஆர்.அரங்கநாதன் அவர்களின் படைப்புகளுடன் அரிய புத்தகங்கள், ஆராய்ச்சி வசதி, குழந்தைகள் பிரிவு, இணைய வசதியுடன் கூடிய மாதிரி நூலகம் ரூ.1.32 கோடி மதிப்பில்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

அமைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

### *7.11.6. செந்நாப் புலவர் ஆ.கார்மேகனார் பெயரில் புதிய நூலகக் கட்டடம்*

செந்நாப் புலவர் ஆ.கார்மேகனார் அவர்கள் தமிழுக்கு ஆற்றிய சேவையினை போற்றும் வகையில், இராமநாதபுரம் மாவட்டம் அபிராமபுரத்தில் உள்ள கிளை நூலகத்திற்கு ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

### *7.11.7. செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்*

"தமிழ்மொழிக்கு அளப்பரிய பங்காற்றிய எழுத்தாளர்கள் மற்றும் தமிழறிஞர்களைப் போற்றும் வகையிலும், அத்தகைய அறிஞர் பெருமக்களை இளம் தலைமுறையினர் முன்மாதிரியாகக் கொள்ளும் வகையிலும், சாகித்ய அகாதமி விருது, ஞானபீட விருது போன்ற உயரிய விருதுகளைப் பெற்ற தமிழ் எழுத்தாளர்களின் புகைப்படங்கள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் படைப்புகள் காட்சிப்படுத்தப்படவும், இளம் தலைமுறையினரின்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

எழுத்தார்வத்தைத் தூண்டும் வகையில் விருது பெற்ற படைப்பாளிகளின் படைப்புகள் சார்ந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தவும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் "செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்" அமைக்கப்பட்டுள்ளது.

### *7.11.8. வெளிப்படைத் தன்மையுடன் பொது நூலகங்களுக்கு புதிய நூல்கள் வாங்குதல்*

பொது நூலகங்களுக்கு வாங்கப்படும் புத்தகங்களுக்கான கொள்முதல் கொள்கையில் தக்க திருத்தங்கள் மேற்கொண்டு, ஒவ்வொரு படிநிலையிலும் ஒளிவு மறைவின்றி வெளிப்படைத் தன்மையுடன் நூல்கள் மற்றும் பருவ இதழ்கள் கொள்முதல் செய்வதற்கான "வெளிப்படைத் தன்மையான நூல் கொள்முதல் கொள்கை–2024" தொடர்பான இணைய முகப்பு (Web Portal) https://bookprocurement.tamilnadupubliclibraries.org/ 11.03.2024 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இக்கொள்கையின்படி அனைத்து மாவட்டங்களில் உள்ள நூலகங்களுக்கு 2024–25ஆம் ஆண்டுக்கான பருவ இதழ்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

மேலும், பொது நூலகங்களுக்கு நூல்கள் கொள்முதல் செய்யவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

### *7.11.9. புத்தகக் கண்காட்சிகள்*

சென்னை புத்தகக் கண்காட்சியைப் போன்று தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 2022-23 ஆம் ஆண்டு முதல் புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2023-24 ஆம் ஆண்டில் மாநில அரசால் ரூ.8.45 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் கண்காட்சிகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன.

### *7.11.10. இலக்கியத் திருவிழாக்கள்*

தமிழ்நாட்டின் புகழ்பெற்ற நதி நாகரிகம் சார்ந்த மரபுகளை அடிப்படையாகக் கொண்ட நமது செழுமையான தமிழ் மொழியின் இலக்கிய மரபுகளைக் கொண்டாடும் வகையில், திருநெல்வேலி மாவட்டத்தில் பொருநை, கோவை மாவட்டத்தில் சிறுவாணி, தஞ்சாவூர் மாவட்டத்தில் காவேரி, மதுரை மாவட்டத்தில் வைகை மற்றும் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் சென்னை இலக்கியத் திருவிழா என ஐந்து இலக்கிய விழாக்கள் ரூ.63.50



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

இலட்சம் செலவில் 2023-24 ஆம் ஆண்டில் சிறப்பாக நடத்தப்பட்டன. மேலும், இளைஞர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் வகையில், 5 இலக்கியத் திருவிழாக்களுடன் 2023-2024-ஆம் ஆண்டில் ரூ.1.85 கோடி செலவில் இளைஞர் இலக்கியத் திருவிழாக்கள் தமிழகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. தலைசிறந்த பேச்சாளர்கள், புகழ்பெற்ற எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், புத்தக ஆர்வலர்கள், புத்தக வாசகர்கள் மற்றும் இளைஞர்கள் என ஏராளமானோர் ஆர்வத்துடன் இவ்விழாக்களில் பங்கேற்றனர்.

7.12. சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சி

உலகளாவிய அறிவுப் பரிமாற்றத்தை நோக்கமாகக் கொண்டு, நமது செழுமையான தமிழ் இலக்கியப் படைப்புகளை உலகம் முழுவதும் எடுத்துச் செல்லவும், சிறந்த பன்னாட்டு அறிஞர்கள் மற்றும் எழுத்தாளர்களின் படைப்புகளைப் பெற்றுத் தமிழில் பல புதிய படைப்புகளை உருவாக்கவும். தமிழ்நாடு அரசால் சென்னை பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சியை ஜனவரி 2023, 16 முதல் 18 வரை ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் வெற்றிகரமாக



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

நடத்தப்பட்டது. இதில் 24 நாடுகளைச் சார்ந்த பன்னாட்டு வெளியீட்டாளர்கள் / விற்பனையாளர்கள், அண்டை மாநில வெளியீட்டாளர்கள் மற்றும் தமிழ்நாட்டுப் பதிப்பாளர்கள் ஆகியோருடன் தமிழ் இலக்கியத்தை மையமாக வைத்து 365 எண்ணிகையில் பதிப்புரிமைகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

2024–ஆம் ஆண்டில் ஜனவரி 16 முதல் 18 வரை சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சியில் 40 நாடுகளைச் சார்ந்த பன்னாட்டு வெளியீட்டாளர்கள் / விற்பனையாளர்கள், அண்டை மாநில வெளியீட்டாளர்கள் கலந்து கொண்டதோடு, 752 எண்ணிகையில் பதிப்புரிமைகள் மாற்றத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், செழுமையான தமிழ் இலக்கியப் படைப்புகளை பிற இந்திய மொழிகளிலும், பன்னாட்டு மொழிகளிலும் மொழியாக்கம் செய்வதற்காக தமிழக அரசால் 2023–24 ஆம் ஆண்டில் மொழிபெயர்ப்பு மானியமாக ரூ.3.00 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

7.13. செயல்படுத்தப்படும் திட்டங்கள்:

*7.13.1. கன்னிமாரா பொது நூலகத்தில் நவீன வசதிகளுடன் சிறப்புப் பிரிவுகள் தொடங்குதல்*

பாரம்பரியமிக்க தேசிய நூலகமாகத் திகழும் கன்னிமாரா பொது நூலகத்திற்கு வருகை தரும் போட்டித் தேர்வு மாணவர்கள், சொந்த நூல்கள் படிக்கும் மாணவ, மாணவியர் மற்றும் குழந்தைகள் பயன் பெறும் வகையில் நவீன வசதிகளுடன் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் சிறப்புப் பிரிவுகள் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*7.13.2. அனைத்து மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் முழுநேரக் கிளை நூலகங்களைப் புதுப்பித்தல்*

அனைத்து மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் முழுநேர கிளை நூலகங்கள் படிப்படியாக வாசகர்கள் வசதிகேற்ப உரிய தளவாடங்களுடன் புதுப்பிக்கப்படும் வகையில், முதற்கட்டமாக 2023–24 ஆம் ஆண்டில் 27 மாவட்ட மைய நூலகங்கள் ரூ.11.14 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் 36 முழுநேர கிளை நூலகங்கள் ரூ.7.14 கோடி மதிப்பீட்டிலும் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2024–25 ஆம்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

ஆண்டில் 70 முழுநேர கிளை நூலகங்களை தலா ரூ.15.00 இலட்சம் மதிப்பில் புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### *7.13.3. நூலகங்களுக்குத் தேவையான தளவாடப் பொருட்கள் வாங்குதல்*

பொது நூலக இயக்ககத்தின் கீழ் செயல்படும் 35 மாவட்ட மைய நூலகங்கள், 314 முழுநேர கிளை நூலகங்கள், 1,612 கிளை நூலகங்கள் மற்றும் 1,915 ஊர்ப்புற நூலகங்கள் ஆக மொத்தம் 3,876 நூலகங்களைப் பயன்படுத்தி வரும் வாசகர்களுக்குத் தேவையான 10,114 இரும்பு நூல் அடுக்குகள், 10,114 படிக்கும் மேசைகள் மற்றும் 53,024 நாற்காலிகள் போன்ற தளவாடங்களை ரூ.45.86 கோடி மதிப்பில் வாங்கி வழங்குவதற்கு, டான்சி நிறுவனம் மூலம் தளவாடப் பொருட்கள் கொள்முதல் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 7.14. நூலக விருதுகள்

மிகச் சிறப்பாகச் செயல்படும் நூலகர்களைப் பாராட்டும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் வெள்ளிப்பதக்கத்துடன் ரூ.5,000 ரொக்கப் பரிசைக்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

கொண்ட "முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன்" விருதும், நூலக மேம்பாட்டு நடவடிக்கைகளைச் சிறப்பாக மேற்கொள்ளும் நூலகங்களுக்கு, சிறந்த நூலக விருதும் வழங்கப்படுவதோடு, நூலக வளர்ச்சிக்குத் துணைபுரியும் வாசக வட்டத் தலைவர்களைப் பாராட்டும் வகையில் ரூ.5,000 மதிப்புள்ள கேடயம் மற்றும் சான்றிதழுடன் கூடிய "நூலக ஆர்வலர்" விருதும் வழங்கப்படுகிறது.

7.15. நிதி ஒதுக்கீடு

அரசால் இவ்வியக்ககத்திற்கு 2024–25 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ரூ.526.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# 8. ஆசிரியர் தேர்வு வாரியம்

## 8.1. முன்னுரை

அரசுப் பள்ளிகளுக்கான ஆசிரியர்கள் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககம், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சட்டக் கல்வி இயக்ககத்தின் கீழ் வரும் உதவிப்பேராசிரியர் பணியிடங்களுக்குத் தகுதியுள்ள உதவிப்பேராசிரியர்களைத் தெரிவு செய்யும் அமைப்பாக ஆசிரியர் தேர்வு வாரியம் 1987 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவ்வாரியம் தொடங்கப்பட்ட நாள் முதல் இதுநாள் வரை பள்ளி, கல்லூரிகளுக்கு 1,72,793 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு சார்ந்த துறைகளால் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் ஆசிரியர் தேர்வு வாரியம் மறுசீரமைக்கப்பட்ட பின்னர் முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித் தொகைத் திட்டத்திற்குத் தகுதியான மாணவர்களைத் தேர்வு செய்தல் மற்றும் அண்ணா பல்கலைக் கழக உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கான தேர்வுகளை நடத்துதல் ஆகிய பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. இவை தவிர, ஆசிரியர் தேர்வு வாரியமானது தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

(TNTET) நடத்தும் மாநில முகவாண்மை நிறுவனமாக (Nodal Agency) செயல்பட்டு வருகிறது.

## 8.2. நோக்கம்

சார்ந்த துறைகளில் தேவைகளின் அடிப்படையில் தகுதியான ஆசிரியர்களை தெரிவு செய்வது ஆசிரியர் தேர்வு வாரியத்தின் முதன்மையான நோக்கமாகும். ஆசிரியர் தேர்வு வாரியமானது மின்னாளுமை முகவாண்மையுடன் இணைந்து தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தித் தெரிவுகளை வெளிப்படையான முறையில் மேற்கொண்டு வருகிறது.

## 8.3. உத்தேச கால அட்டவணை மற்றும் தெரிவுப் பணிகள்

2024ஆம் ஆண்டிற்கான உத்தேச கால அட்டவணையை ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்டுள்ளது. அதன்படி தெரிவுப்பணி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 33 வட்டாரக் கல்வி அலுவலர் (BEO)



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

பணியிடங்களுக்குத் தகுதியான பணிநாடுநர்கள் தெரிவு செய்யப்பட்டு, தெரிவுப் பட்டியலானது தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு அனுப்பப்பட்டது.

- அண்ணா பல்கலைக் கழகத்திற்கான உதவிப்பேராசிரியர்கள், உதவி நூலகர்கள் மற்றும் உதவி இயக்குநர் (உடற்கல்வி) போன்ற 320 பணியிடங்களுக்கான தெரிவுப்பணிகளை மேற்கொள்ள அண்ணா பல்கலைக்கழகம் மூலம் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. தொடர்ந்து ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் போட்டித் தேர்வுகள் நடத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு கல்வியியல் கல்லூரிகளுக்கான 4000 உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் அறிவிக்கை (எண்.02/2024) வெளியிடப்பட்டு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

அதற்கான இணையவழி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அதற்கான போட்டி தேர்வு நடத்தப்பட உள்ளது.

- 2024 ஆம் ஆண்டுக்கான, 3192 பட்டதாரி ஆசிரியர்கள் / வட்டார வள மைய பயிற்றுநர் காலிப்பணியிடங்களுக்கான நேரடி நியமனத்திற்கான போட்டித் தேர்வு 04.02.2024 அன்று வெளிப்படைத் தன்மையுடன் நடைபெற்றது. இத்தேர்வில் 40135 தேர்வர்கள் தேர்வில் கலந்து கொண்டு தேர்வு எழுதினர். தேர்வு முடிவுகள் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- 2024ஆம் ஆண்டுக்கான 1768 இடைநிலை ஆசிரியர் காலிப் பணியிடங்களுக்கு 09.02.2024 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டு இணைய வழி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. கொள்குறி வகை (OMR Based)



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

அடிப்படையில் தேர்வுகள் நடைபெற உள்ளது.

- 2024 ஆம் ஆண்டுக்கான உத்தேச கால அட்டவணையின்படி ஆசிரியர் தகுதித் தேர்வு தாள் I மற்றும் II நடத்த திட்டமிடப்பட்டு வருகிறது.

### 8.4. ஆசிரியர் தகுதித் தேர்வு சான்றிதழ்

ஆசிரியர் தகுதித் தேர்வு சான்றிதழ்கள் (தாள்–I மற்றும் தாள்–II) ஜூன் 2023 வரை நேரடியாக வழங்கப்பட்டு வந்தது. 17.07.2023 முதல் மறுபிரதி சான்றிதழ்கள் இணைய வழியில் இ–சேவை மையம் மூலம் வழங்குவதற்கான நடைமுறை அமல்படுத்தப்பட்டு, 30.04.2024 வரை 7985 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 8.5. முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித் தொகை திட்டம் (CMRF)

தமிழ்நாட்டு மாணவர்களின் ஆராய்ச்சித் திறமையை மேம்படுத்தவும் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்தவும், முதலமைச்சரின் ஆராய்ச்சி



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

உதவித் தொகை திட்டம் தொடங்கி மாநில அளவில் தகுதித் தேர்வினை நடத்த ஆணை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, மாநில அளவிலான தகுதித் தேர்வு (Qualification Examination) 17.12.2023 அன்று நடத்தப்பட்டு, மதிப்பெண் பட்டியல் கல்லூரிக் கல்வி இயக்ககத்திற்கு அனுப்பப்பட்டது. உதவித் தொகை திட்டத்திற்குத் தகுதியான 120 மாணவர்களைத் தெரிவு செய்யும் பணிகள் கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் மூலம் நடைபெற்றன.

### 8.6. குறைதீர்க்கும் மையம் மற்றும் தகவல் மையம்

ஆசிரியர் தேர்வு வாரிய அறிவிக்கைகள், தேர்வுகள், சான்றிதழ் சரிபார்த்தல், தெரிவுகள் மற்றும் இவை சார்ந்த இதர விவரங்கள் தொடர்பாக விண்ணப்பதாரர்களால் நேரில் வழங்கப்படும் விண்ணப்பங்கள் மற்றும் சந்தேகங்கள், தொலைபேசி வாயிலாகக் கோரப்படும் சந்தேகங்கள், தபால் மற்றும் மின்னஞ்சல் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகியவற்றின் மீது நடவடிக்கை மேற்கொள்ள குறைதீர்க்கும் மையம் (Grievance Redressal Cell) உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கெனத் தொலைபேசி தகவல் மையம் (Call



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Centre) செயல்பட்டு வருகிறது. தேர்வர்களின் சந்தேகங்களுக்கு விரைவாக விளக்கம் அளிக்கும் வகையில் கட்டணமில்லா எண் (1800 425 6753) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அனைத்துத் தெரிவுகள் தொடர்பான தகவல்களை வெளியிட புதிய இணையதளம் http://www.trb.tn.gov.in மற்றும் அலுவலக மின்னஞ்சல் trb@tn.gov.in ஆகியன செயல்பட்டு வருகின்றன.

**8.7. போட்டித் தேர்வுகளை நடத்திட அரசுப் பள்ளிகளில் கணினி ஆய்வகங்கள்**

ஆசிரியர் தேர்வு வாரிய போட்டித் தேர்வுகளைத் திட்டமிட்டபடி நடத்திட அரசுப் பள்ளிகளில் ரூ.30.00 கோடி மதிப்பீட்டில் கணினி ஆய்வகங்கள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் அமைக்க ஆணை வெளியிடப்பட்டது. அதற்கென தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் மறு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் போட்டித் தேர்வுகள் நடத்த உரிய அம்சங்கள் (specifications) அடங்கிய கணினி ஆய்வகங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பள்ளித் தேர்வுகள்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

நடைபெறாத காலங்களில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் கணினி வழித் தேர்வுகள் நடத்திட அனுமதிக்கப்பட்டுள்ளது.

## 8.8. ஆசிரியர் தேர்வு வாரியம் மறுசீரமைப்பு

தெரிவுப் பணிகளை மேலும் திறம்படவும் வெளிப்படை தன்மையுடன் மேற்கொள்ளும் பொருட்டு ஆசிரியர் தேர்வு வாரியம் மறுசீரமைப்பு செய்யப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு இந்திய ஆட்சிப் பணி நிலையில் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் பணியிடம் ஒன்றும், ஒரு மாவட்ட வருவாய் அலுவலர் பணியிடமும், ஒரு இணை இயக்குநர் பணியிடமும், இரண்டு துணை இயக்குநர் பணியிடங்களும், மூன்று துணை ஆட்சியர் பணியிடங்களும், ஒரு தொழில்நுட்பத் துணை இயக்குநர் பணியிடமும், மூன்று முதுநிலை புரோகிராமர் பணியிடங்களும், ஆறு இளநிலை புரோகிராமர் பணியிடங்களும், இரண்டு விவரப் பகுப்பாய்வாளர் (Data Analyst) பணியிடங்களும், நான்கு விவர நிறுவாளர் (Data Administrator) பணியிடங்களும், ஒரு உதவிக்கணக்கு அலுவலர் பணியிடமும் 46



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

அமைச்சுப் பணியாளர்கள் பணியிடங்களும் என மொத்தம் 71 பணியிடங்கள் அரசால் கூடுதலாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

### 8.9. நிதி ஒதுக்கீடு

அரசால் ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு 2024-25 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ரூ.47.57 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# 9. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

## 9.1. முன்னுரை

1961இல் தமிழ்நாடு அரசால் "தமிழ் வெளியீட்டுக் கழகம்" பிற மொழிகளில் வெளியான உயர்கல்வி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதற்காக நிறுவப்பட்டது. 1970 இல் இது "தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்" என்று பெயரிடப்பட்டது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்குப் பல்வேறு கல்விக் கருவிகளை வாங்கி வழங்கும் புதிய பொறுப்புகளுக்கு ஏற்றபடி, "தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்" என 2013–இல் மறுபெயரிடப்பட்டது.

## 9.2. நோக்கங்கள்

- 1 முதல் 7 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கான 3 பருவப் பாடநூல்கள் மற்றும் 8 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கான



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

வருடாந்திரப் பாடநூல்கள் ஆகியவற்றை அச்சிட்டு வழங்குதல்.

- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு பள்ளிப்பைகள், காலணிகள் போன்ற கல்வி உபகரணங்களை வழங்குவதற்கான கொள்முதல் நிறுவனமாகச் செயல்படுதல்.

- கலை மற்றும் அறிவியல், மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், சூழலியல், சட்டம், இலக்கியம், சித்த மருத்துவம், மீன்வளம் மற்றும் உடற்கல்வி போன்ற துறை சார்ந்த உயர்கல்வி நூல்களை ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்த்து அச்சிட்டு வழங்குதல் மற்றும் கூட்டு வெளியீடுகளாகக் கொண்டு வருதல்.

- தமிழ் இலக்கியங்களை ஆங்கிலம் மற்றும் பிற தென்னிந்திய மொழிகளில் மொழிபெயர்த்தல்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

- அரிய மற்றும் பழைய தமிழ் நூல்களை மறுபதிப்பு செய்தல் மற்றும் அவை மாணவர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள் மற்றும் வாசகர்கள் ஆகியோருக்குச் சந்தையில் கிடைப்பதை உறுதி செய்தல்.

- மாநிலம் முழுவதும் பல்வேறு புத்தகக் கண்காட்சிகளில் பங்கேற்றல் மற்றும் மாநிலத்தில் உள்ள பல்வேறு அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு மறுபதிப்பு நூல்களை விற்பனை செய்தல்.

- சென்னை பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சி உட்பட பல்வேறு இலக்கிய, பண்பாட்டு மற்றும் மரபு சார் நிகழ்வுகளுக்கு அரசாணைகளின்படி அவ்வப்போது நிதி வழங்குதல்.

## 9.3. உள்கட்டமைப்பு

கழகத்தின் தலைமை அலுவலகம் பேராசிரியர் அன்பழகன் வளாகத்தில் (முன்னர் டிபிஐ வளாகம் என்று அழைக்கப்பட்டது) உள்ள ஈ.வி.கே சம்பத் மாளிகையில் அமைந்துள்ளது. இதைத்தவிர மாநிலம்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

முழுவதும் 22 மண்டல அலுவலகங்களையும் கொண்டுள்ளது.

## 9.4. பாடநூல் விநியோகம்

அரசு மற்றும் அரசு நிதிஉதவி பெறும் பள்ளிகளுக்கு இலவச பாடநூல்கள் இக்கழகத்தால் அச்சிட்டு வழங்கப்பட்டு வருகின்றன. விற்பனைப் பாடநூல்கள் சுயநிதிப் பள்ளிகள் மற்றும் பொது மக்களுக்கு இணைய தளம் வழியாகவும், தலைமை அலுவலகத்தில் 2 விற்பனை நிலையங்கள், அண்ணா நூலக விற்பனை நிலையம் மற்றும் அடையாறு கிடங்கில் ஒரு விற்பனை நிலையம் ஆகியவற்றிலும் வழங்கப்படுகிறது. மேலும் இ-சேவை மையம் (TACTV) வழியாகப் பாடநூல்களைப் பெற்றுக் கொள்ளவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

## 9.5. 2023-24இல் அச்சிடப்பட்ட பாடநூல்களின் விவரம்

| பாடநூல்களின் விவரங்கள் | அச்சடிக்கப்பட்ட பாடநூல்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | தோராய மதிப்பு (ரூபாய் கோடிகளில்) |
|---|---|---|
| அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் | 475.00 | 326.15 |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

| | | |
|---|---|---|
| 12 வகுப்பு மாணவர்களுக்கான பாடநூல்கள் (இலவச பிரதிகள்) | | |
| சுயநிதிப் பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்பு மாணவர்களுக்கான பாடநூல்கள் (விற்பனைப் பிரதிகள்) | 197.18 | 217.18 |
| மத்திய இடைநிலைக் கல்வி வாரியப் பள்ளிகளில் 1 முதல் 10 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான தமிழ்மொழி பாடநூல்கள் (விற்பனைப் பிரதிகள்) | 12.63 | 8.65 |

## 9.6. பிறநூல்களை அச்சிடுதல்

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், தொல்லியல் துறை, தொழில் நுட்பக்கல்வி இயக்ககம், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பிற்படுத்தப்பட்டோர், மிகபிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதலான துறைகளுக்குத் தேவையின் பொருட்டு, இக்கழகம் பல்வேறு நூல்களை அச்சிடும் பணியை மேற்கொண்டு வருகின்றது. இக்கழகம் 2023–24 ஆம் ஆண்டில்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

மேற்காணும் துறைகளுக்குத் தோராயமாக ரூ.141.93 கோடி மதிப்பிலான 914.69 இலட்சம் நூல்களை அச்சடித்து வழங்கியுள்ளது.

## 9.7. அரிய நூல்களை மின்மயமாக்குதல் மற்றும் மறுபதிப்பு செய்தல்

தமிழ்வழியில் உயர்கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட போது, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் (அப்போது, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்) 1968–78 காலகட்டத்தில் கிட்டத்தட்ட 900 புத்தகங்களை வெளியிட்டது. அந்தப் புத்தகங்களை மின்மயமாக்கி மறு அச்சிட தமிழ்நாடு அரசு முடிவு செய்தது. ஆராய்ச்சி அறிஞர்கள், மாணவர்கள், அரிய புத்தக சேகரிப்பாளர்கள் மற்றும் பொது வாசகர்கள் ஆகியோர் பயனடையும் வண்ணம் இந்தச் செயல்பாடு 2017–இல் தொடங்கப்பட்டது. அந்தப் புத்தகங்களில், இதுவரை 875 தலைப்புகளைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் வாயிலாக மின்மயமாக்கி, 687 தலைப்புகளை ஆவணப் பதிப்பாகக் கொண்டு வந்துள்ளது. 635 அரிய நூல்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுடன் கூட்டு வெளியீடாகக் கொண்டு வரப்பட்ட போட்டித் தேர்வு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

நூல்களுடன் இதுவரை ரூ.3.18 கோடி மதிப்புள்ள நூல்கள் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்ட வாரியாக நடைபெற்று வரும் புத்தகக் காட்சிகள், தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கண்காட்சி – 2024, தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரை, மாபெரும் தமிழ்க்கனவு நிகழ்வுகள் போன்ற பல்வேறு இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகள், போட்டித் தேர்வுக்கான பயிற்சி மையங்கள், கலைஞர் நூற்றாண்டு நூலகம், அறிவுசார் மையம் போன்ற கல்வி மையங்கள் ஆகியவற்றுக்குக் கொள்முதல் ஆணை பெற்று ரூ.2 கோடி மதிப்பிலான புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும், போட்டித் தேர்வுக்கான உயர்கல்வி நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இணைய வழியாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

அண்ணா நூற்றாண்டு நூலகம், கன்னிமாரா நூலகம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC), பணியாளர் கல்லூரியோடு இணைந்துள்ள



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

அகில இந்திய குடிமைப் பணி பயிற்சி மையம், தமிழ் இணையக் கல்விக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் (RMRL), டாக்டர் APJ அப்துல் கலாம் நூலகம், ராமேஸ்வரம் போன்ற பல நிறுவனங்களுக்கு இந்தத் தலைப்புகளின் ஆவணப் பதிப்புகள் மாணவ / சமூகத்தின் நலன்கருதி இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. ஜனவரி 2024–இல் நடைபெற்ற 47–வது சென்னை புத்தகக் காட்சியில் ரூ.7.22 இலட்சம் மதிப்பிலான புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

9.8. போட்டித் தேர்வு நூல்கள்

உயர்கல்வி நுழைவுத் தேர்வு (இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல்) வினா வங்கிகள் தனியார் நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்டு 6 தொகுதிகளில் வெளியிடப்பட்டுள்ளன. ரூ.1.33 கோடி மதிப்பிலான 2000 பிரதிகள் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மூலம் 16 மாதிரிப் பள்ளிகளுக்கும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக விற்பனைக்காகவும் வழங்கப்பட்டுள்ளன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

### 9.9. திசைதோறும் திராவிடம்

தமிழின் தொன்மை, மரபு மற்றும் சமகாலத்தை எதிரொளிக்கவும், உலக இலக்கியத்தை வளப்படுத்தவும் மற்றும் பிற திராவிட மொழிகளின் குறிப்பிடத்தக்க இலக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்க்கவும் தமிழ்ப் புனைகதைகள் மற்றும் புனைகதை அல்லாதவற்றை ஆங்கிலம் மற்றும் பிற திராவிட மொழிகளில் மொழிபெயர்ப்பதற்காகவும் 'திசைதோறும் திராவிடம்' என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இவற்றில், இதுவரை 50 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### 9.10. முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் முன்னணிப் பதிப்பகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு கலை, அறிவியல், மருத்துவம், பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 18.01.2023 அன்று முதலாம் ஆண்டு சென்னை



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

பன்னாட்டு புத்தகக் காட்சியில் 5 மருத்துவ நூல்கள் வெளியிடப்பட்டன. அவை மருத்துவ நூல்களின் உலகளாவிய பதிப்பகங்களோடு இணைந்து இக்கழகம் கொண்டுவந்துள்ள கூட்டு வெளியீடுகளாகும். மேலும், 16.01.2024 முதல் 18.01.2024 நடைபெற்ற 2வது சென்னை பன்னாட்டு புத்தகக் காட்சியில் 62 நூல்களில், 15 மருத்துவ நூல்கள் வெளியிடப்பட்டு, மொழிபெயர்ப்புத் துறையில் உலகளாவிய மொழிகளுடன் அதன் போட்டியை வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளது. மேலும், 2 ஒடிய மொழி இலக்கிய நூல்கள் மற்றும் கலைஞர் அவர்கள் உரை எழுதிய 'குறளோவியம்' நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு ஆகியன மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டன. இதுவரை இத்திட்டத்தின்கீழ், 107 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### 9.11. இளந்தளிர் இலக்கியத் திட்டம்

குழந்தைகளுக்கான சிறந்த புத்தகங்கள் கிடைக்கும் வகையில் இக்கழகம் செயல்படுத்தி வரும் இளந்தளிர் இலக்கியத் திட்டத்தின் கீழ் 25 சிறார் நூல்கள் எழுத்தாளர்களைக்கொண்டு இதுவரை 133



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

நூல்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. 59 நூல்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டன. 76 நூல்கள் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டன.

## 9.12. கலைக் களஞ்சியம் மற்றும் சிறார் கலைக்களஞ்சியம்

கலைக் களஞ்சியம் 10 தொகுதிகள் மற்றும் சிறார் கலைக்களஞ்சியம் 10 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. கலைக்களஞ்சியம் சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் நடைபெற்ற புத்தகக் காட்சியில் நல்ல வரவேற்பைப் பெற்றது.

## 9.13. நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்களின் வரிசையில் இதுவரை 32 நூல்கள் வெளியிடப்பட்டு, ரூ.2.00 இலட்சத்திற்கும் மேலான மதிப்புள்ள நூல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## 9.14. நூற்றாண்டு காணும் ஆளுமைகளின் தொகுப்புகள் வெளியீடு

பேராசிரியர்.க.அன்பழகன் அவர்களின் தொகுப்பு 06.01.2023 அன்று நடைபெற்ற இலக்கியத் திருவிழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டு, 2023 ஆம் ஆண்டு 46வது சென்னைப் புத்தகக் காட்சியிலும் பிற மாவட்டங்களில் நடைபெற்ற புத்தகக் காட்சிகளிலும் நல்ல வரவேற்பைப் பெற்றது. குழந்தை புத்தக எழுத்தாளர் அழ. வள்ளியப்பா, தி. ஜானகிராமன், கி.ராஜநாராயணன் ஆகியோரின் தொகுப்புகள் 18.01.2024 அன்று நடைபெற்ற 2வது சென்னைப் பன்னாட்டுப் புத்தகக் காட்சியில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டன.

## 9.15. கூட்டு வெளியீடுகள்

தமிழ் வளர்ச்சித்துறையுடன் கூடிய கூட்டு வெளியீடாக செவ்விலக்கிய நூல்கள் பத்துப்பாட்டு – 10 நூல்கள் மற்றும் இறைனார் அகப்பொருள், குறுந்தொகை, பதிற்றுப்பத்து மொத்தம் 13 நூல்கள்,



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

சமூகநீதி மற்றும் இடஒதுக்கீடு திட்டத்தின்கீழ் 13 தொகுதிகள் கொண்ட ஆங்கில நூல் – 1, பெரியார் சிந்தனைத் தொகுப்பு 21 மொழிகளில் இதுவரை 10 மொழிபெயர்ப்புகள், தமிழ்–இந்தோ ஐரோப்பா அகராதித் திட்டத்தின்கீழ் முதல் தொகுப்பு தமிழ் மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்பு – 2 நூல்கள் என மொத்தம் இதுவரை 26 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், தமிழ் வளர்ச்சித் துறையுடன் மேற்கொண்ட மற்றொரு கூட்டு வெளியீடான திராவிடக் களஞ்சியத் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 9.16. புதிய முயற்சிகள்

#### *9.16.1. ஆங்கிலத்தில் தமிழ் நூல்கள் (ஆங்கில மொழிபெயர்ப்பு)*

இந்திய மற்றும் உலகளவில் புகழ்பெற்ற புத்தகப் பதிப்பாளர்களான Penguin Random House, Hachette India, Navayana, Routledge, Ratna Books, Oxford University Press, Harpercollins போன்ற நிறுவனங்களோடு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு, 5 நூல்கள் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் 2வது சென்னைப் பன்னாட்டுப் புத்தகக் காட்சியில் 18.01.2024 அன்று வெளியிடப்பட்டன.

### *9.16.2. உலக இலக்கியங்கள் தமிழில் (தமிழ் மொழிபெயர்ப்பு)*

உலக இலக்கியங்களின் எளிமைப்படுத்தப்பட்ட, குழந்தைகளுக்கான நூல் வரிசையில் சுமார் 25 நூல்களை மலையாள நிறுவனமான DC Books (Mango Classics), கனடா நாட்டு நிறுவனமான Wonder House, இந்திய நிறுவனமான Xact Group of Companies போன்ற நிறுவனங்களோடு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு, 14 நூல்கள் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் 2வது சென்னை பன்னாட்டுப் புத்தகக் காட்சியில் 18.01.2024 அன்று வெளியிடப்பட்டன.

### *9.16.3. வைக்கம் போராட்டம் நூற்றாண்டு அறிவிப்பு*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் குறித்து, விதி 110இன் கீழ் வெளியிடப்பட்ட



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

அறிவிப்பின்படி, பழ. அதியமான் எழுதிய வைக்கம் போராட்டம் என்ற நூல் மலையாளத்தில் மொழிபெயர்த்து, மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்களால் 01.04.2023 அன்று கேரளத்தில் வெளியிடப்பட்டது. இந்நூலின் கன்னட மொழிபெயர்ப்பு 29.11.2023 அன்று வெளியிடப்பட்டது. தெலுங்கு மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணி நடைபெற்று வருகிறது. 135 பக்கங்கள் கொண்ட சிறு தொகுப்பு நூல் 28.12.2023 அன்று வெளியிடப்பட்டது.

### 9.17. புதுமைப்பெண்

சமூகநீதி மற்றும் பெண்கள் உரிமைத் துறைக்காக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தின்கீழ்ப் புதுமைப் பெண் என்ற திட்டத்தின் மூலம் 1 இலட்சம் பிரதிகளுக்கு மேல் அச்சடித்து வழங்கப்பட்டுள்ளது.

### 9.18. "மாபெரும் தமிழ் கனவு"

தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட "மாபெரும் தமிழ் கனவு" என்ற தமிழ் மரபு

www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

மற்றும் பண்பாட்டுப் பரப்புரைத் திட்டத்திற்கு இக்கழகம் ரூ.95 இலட்சம் நிதியளித்தது.

### 9.19. நடமாடும் புத்தக நிலையம் (Mobile Book Shop)

தமிழ்மொழி வழியில் பயிலும் கல்லூரி மாணவர்களுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள உயர்கல்வி நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்பு மற்றும் போட்டித் தேர்வுகளுக்கான அரிய உயர்கல்வி நூல்கள் மற்றும் போட்டித் தேர்வு நூல்கள் விற்பனை 27.06.2023 அன்று தொடங்கப்பட்டு, இதுவரை அன்னை வேளாங்கன்னி கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரி, செல்லம்மாள் கல்லூரி, வேல்டெக் கல்லூரி, தாகூர் கல்லூரி போன்ற கல்லூரிகளுக்கு பேருந்து மூலம் (Mobile Book Shop) கொண்டுசென்று விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### 9.20. விற்பனை மையம் திறப்பு

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தரைத் தளத்தில் 01.03.2023 அன்று பேராசிரியர் அன்பழகனார் நூற்றாண்டு நினைவு விற்பனை மையம் திறக்கப்பட்டுள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## 9.21. நிலைத்த மேம்பாட்டு இலக்குகள் (Template for inclusion of sustainable Development Goals)

ஐக்கிய நாடுகள் அவையின் நிலைத்த, நீடித்த வளர்ச்சிக்கான 17 குறிக்கோள்களை பள்ளிக் குழந்தைகளுக்குத் தெரிவிக்கும் வண்ணம் 17 சிறார் நூல்கள் இளந்தளிர் இலக்கியத் திட்டத்தின் கீழ் தமிழில் வெளியிடப்பட உள்ளன. 2024 பிப்ரவரியில் புது தில்லியில் நடந்த உலகப் புத்தகத் திருவிழாவில் பேராசிரியர் ஷாலினி வர்மாவுடன் இதற்கான மொழியாக்க உரிமைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் மொழிபெயர்க்கப்பட்டுவரும் இந்த நூல்கள் 2025 ஜனவரியில் நடைபெறவுள்ள சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில் வெளியிடப்படும்.

## 9.22. கொள்முதல் பணிகள்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், அவர்களுடைய செயல்திறனை ஊக்குவிப்பதற்கும் 2024–25ஆம் ஆண்டில்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

ரூ.277.61 கோடி மதிப்பில் கல்வி உபகரணப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது.

www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# 10. நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண். 43, பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2024-25 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ. 44,042.08 கோடியாகும்.

## 2024 -25 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| கணக்குத் தலைப்பு | | | மாநில செலவினங்கள் | மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **வருவாய் பகுதி** | | | | | |
| 2051 | அரசுப் பணியாளர் தேர்வாணையம் | | **4757.45** | | **4757.45** |
| 2059 | பொதுப் பணிகள் | | **20105.00** | | **20105.00** |
| 2202 | **பொதுக் கல்வி** | | | | |
| | 1 | தொடக்கக் கல்வி | 1870095.06 | 243793.56 | 2113888.62 |
| | 2 | இடைநிலைக் கல்வி | 2026235.48 | 96407.25 | 2122642.73 |
| | 4 | வயது வந்தோர் கல்வி | 238.21 | 975.81 | 1214.02 |
| | 5 | மொழி வளர்ச்சி | 2215.09 | | 2215.09 |
| | | திருப்பி வசூலிப்பவை | 8970.46 | | 8970.46 |
| **மொத்தம் – பொதுக் கல்வி** | | | **3907754.30** | **341176.62** | **4248930.92** |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

| | | | | |
|---|---|---|---|---|
| 2204 | விளையாட்டு, இளைஞர் நலப் பணிகள் | 561.56 | | 561.56 |
| 2205 | கலையும் பண்பாடும் | 41012.21 | | 41012.21 |
| 2225 | ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிறப்டுத்தப்பட்டோர் நலன் | 35672.76 | | 35672.76 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | 203.00 | | 203.00 |
| 2251 | தலைமைச் செயலகம் சமூகப் பணிகள் | 1238.94 | | 1238.94 |
| | **நிகர மொத்த வருவாய்ப் பகுதி** | **4011305.22** | **341176.62** | **4352481.84** |
| மூலதனச் செலவுப் பகுதி | | | | |
| 4202 | மூலதனச் செலவு | 51676.31 | | 51676.31 |
| **கடன் பகுதி** | | | | |
| 7610 | அரசுப் பணியாளர்களுக்கான கடன்கள் | 50.00 | | 50.00 |
| | **நிகர மொத்தம்** | **4063031.53** | **341176.62** | **4404208.15** |
| **மானியக் கோரிக்கை எண். *43 இன் நிகர மொத்தம்*** | | | | **4404208.15** |

நமது மாண்புமிகு முதலமைச்சரின் ஆற்றல்மிக்க தலைமை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் இவ்வரசு அறிவுசார் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, கற்பித்தல்–கற்றல் செயல்முறைகளில் முழுமையான மற்றும் காலத்திற்கேற்ற கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருவதன் மூலம்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வியை வழங்கி நீடித்த நிலையான வளர்ச்சியினை இம்மாநிலம் அடைவதற்கு இவ்வரசு உறுதி பூண்டு பல்வேறு முயற்சிகளைச் செயல்படுத்தி வருகிறது.

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
**பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net
www.Trb Tnpsc.Com



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுடன் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் (25.8.2023) அன்று முத்தமிழறிஞர் பயின்ற திருக்குவளை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை அனைத்து அரசுத் தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்தார்கள்

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் (9.8.2023) அன்று பள்ளிக் கல்வித் துறை சார்பில் சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான பாராட்டு விழாவில், மாணவ, மாணவியர்களுக்குச் சான்றிதழ் மற்றும் மடிக்கணினிகளை வழங்கி வாழ்த்தினார்கள்

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகத்தில் அன்னாரது திருவுருவச்சிலையை 10.08.2023 அன்று திறந்து வைத்தார்கள்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் (26.6.2023) அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில், சென்னை பெருநகர காவல்துறை சார்பில் நடைபெற்ற "சிற்பி" நிறைவு விழாவில், சிற்பி திட்டத்தில் பயிற்சி முடித்த மாணவ, மாணவியர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார்கள்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 17.2.2024 அன்று தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள புதிய பள்ளிக் கட்டடங்கள் மற்றும் செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம், முசிறி கிளை நூலகக் கட்டடம், முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் நினைவு நூலகக் கட்டடம் மற்றும் செந்நாப்புலவர் கார்மேகனார் நூலகக் கட்டடம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்கள்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் (14.6.2024) அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில், 2024–ஆம் ஆண்டு 10 மற்றும் 12–ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் தமிழ்ப் பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்ற 43 மாணவ, மாணவியர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கருணை அடிப்படையிலான இளநிலை உதவியாளர் பணி நியமன ஆணைகளை 31.07.2023 அன்று வழங்கினார்கள்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் (14.6.2024) அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் கலந்துகொண்டு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களிடம் (18.6.2024) அன்று தலைமைச் செயலகத்தில், பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே சாதி, இன உணர்வுகளால் உருவாகும் வன்முறைகளைத் தவிர்க்கவும், நல்லிணக்கம் ஏற்படுத்திடவும், வழிமுறைகளை வகுத்திடவும் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதியரசர் திரு.கே. சந்துரு அவர்கள் தலைமையிலான ஒரு நபர் குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com



மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 14.11.2023 அன்று சிறந்த பள்ளிகளுக்குக் கேடயம் வழங்கினார்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com




திருச்சி மாவட்டம், பொன்னுசங்கம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 21.07.2023 அன்று மாபெரும் வாசிப்பு இயக்கம் தொடக்க நிகழ்வில் அமைச்சர் பெருமக்கள்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




தனியார் பள்ளிகளுக்கு அங்கீகார ஆணைகள் வழங்கும் விழா

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com



மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பள்ளிகள் துவங்கிய முதல் நாளிலேயே மாணவ மாணவியருக்குப் பாடப் புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகங்களை வழங்கினார்கள்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




**மாநில அளவிலான அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது மற்றும் பேராசிரியர் அன்பழகன் விருதுகளை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Trb Tnpsc.Com





மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வித் துறை சங்க நிர்வாகிகளுடன் கலந்துரையாடல்

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com



அரசுப் பள்ளிகளில் தொடங்கப்பட்ட திறன்மிகு வகுப்பறைகள்

www.Padasalai.Net



மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நார்வே மற்றும் ஸ்வீடன் உள்ளிட்ட நாடுகளின் கல்வி நிறுவனங்கள் மற்றும் நூலகங்களைப் பார்வையிட்டார்கள்

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



சாரண சாரணியர் மாநில பெருந்திரள் அணியில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பங்கு கொண்டார்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net




தலை நகரில் அண்ணா




தமிழ் நகரில் கலைஞர்

அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.